தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

₹ 10/- மலர் 16 இதழ் 07 நவம்பர் 2014 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் வாழ்வு வளம் பெற...

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மகத்தான சாதனைகள்

அன்பு தோழிகளே!
ஒவ்வொரு மாதமும் உங்களை முற்றம் இதழின் வாயிலாக
சந்திக்க போகிறேன். என் எண்ணங்களையும், கனவுகளையும்
உங்களுடன் பகிர்ந்து கொள்ள காத்திருக்கிறேன்.
வெற்றி சிகரம் தொட வாருங்கள்... கை கோர்த்து நடை போடுவோம்!

வானம் வசப்படும்!

திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

கனவுகள் உன்னுள் பூத்துக் குலுங்கட்டும்
காலம் உன்னை வெற்றித் திருமகளாக்கட்டும்

செய்யும் வேலையில் உயர்வு தாழ்வு இல்லை
நேர்மையாய் செய்யும் வேலை
அனைத்தும் உயர்வானதே!

உழைப்பை மூலதனமாக்கி
உன் வாழ்வை எதிர் கொண்டால்
வானம் வசப்படும் – அந்த
வானவில் உனக்கு
வண்ண மாலையாகும் !!

கை பிடித்து நடை பழக
கால் சோரும் வேளையில்
நம்பிக்'கை' கொடுக்க
நானிருப்பேன் தாயாய்!

மங்கையராய் பிறப்பதற்கே
மாதவம் செய்திடல் வேண்டும்

துணிந்து நில் !!
சவால்களை எதிர்கொள் !!
வானம் வசப்படும்
வெற்றி மாலை உன்னை சேரும் !!

என்றும் அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

உழைப்பை மூலதனமாக்கி
உன் வாழ்வை எதிர் கொண்டால்
வானம் வசப்படும் – அந்த
வானவில் உனக்கு
வண்ண மாலையாகும் !!

வானம் வசப்படும்!

உள்ளே...



மலைகளின் இளவரசி கொடைக்கானல்	4
பெண்களைக் காத்திடுவோம்	8
பிளாஸ்டிக்கைக் குறைப்போம்	13
சேமிப்பு + சிக்கனம்	16
சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்	22
பதக்கங்கள் வென்றவர்களுக்குப் பாராட்டு	30
குளக்கரை கெண்டை மீன் வளர்ப்பு	32

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

சுய உதவிக் குழு மகளிரின் செயல்பாடுகளையும், அவர்களின் வெற்றிகளையும் மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றம் இதழில், மகளிர் வங்கியின் தலைவர் அவர்களின் நேர்காணல் எங்களைப் போன்றவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக உள்ளது.

லதா அய்யப்பன்,
மல்லிகை மகளிர் சுய உதவிக் குழு,
உடையார்பட்டி, நெல்லை மாவட்டம்

கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்தி வரும் புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றின் செயல்பாடுகளும், வெற்றி பெற்றவர்களின் வெற்றிக் கதைகளும் எங்களுக்கு பல்வேறு வகையிலும் ஊக்கமளிப்பதாக உள்ளது. முற்றத்திற்கு எங்களின் நன்றி.

சித்ரா ராமதாஸ்,
தாமரை மகளிர் சுய உதவிக் குழு,
ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

மகளிருக்கு பயனுள்ள குறிப்புகளையும், செய்திகளையும் தாங்கி வரும் முற்றம் இதழ் சுய உதவிக் குழுக்களின் நல்ல தோழியாக உள்ளது. மாதந் தோறும் முற்றம் இதழை எங்கள் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் படிக்கின்றனர்.

ராஜேஸ்வரி ராஜேந்திரன்,
செல்வ விநாயகர் மகளிர் குழு,
இ.ஆர். நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை வள மாக்க பல்வேறு வகையிலும் செயல்பட்டு வரும் சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த செய்திகளும், அவற்றால் பயனடைந்தவர்களின் வாழ்த்தும் எங்களுக்கு ஊக்கம் தருவதாக உள்ளது.

கற்பகம் நெடுஞ்செழியன்,
நட்சத்திரம் மகளிர் சுய உதவிக் குழு,
மேட்டுத் தெரு, சேலம் நகரம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●
முற்றம்
மலர் 16 இதழ் 07 நவம்பர் 2014
விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்
வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
எம். மாதவி
கூடுதல் இயக்குநர்
எல். ராஜா
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
கா. சுஜாதா ஜேக்கப்
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
ப. கலைமதி
மக்கள் தொடர்பு அலுவலர்

முற்றம் உதவியாளர்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு (ஒப்பந்தம்)
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி: 044-2817 3412 / 3413
தொலைநகல்: 044-2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

பாதுகாக்கப்பட வேண்டிய மனித உரிமைகள்...

வடகிழக்கு பருவ மழை பரவலாக பெய்து தமிழக மக்கள் அனைவரையும் மகிழ்ச்சியூட்டியிருக்கிறது. பல பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதையும், ஏரிகள், குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் போன்ற நீர்நிலைகள் நிரம்பி வழிவதையும், நீர்வீழ்ச்சிகளில் நீர் கொட்டுவதையும் பார்ப்பதற்கே கண்கொள்ளா காட்சியாக இருக்கிறது. இதனால் விவசாயிகளின் முகங்களில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. விளைச்சல் பெருகவும் மற்றும் குடிநீர் பிரச்சனை தீரவும் வழி ஏற்பட்டுள்ளது.

அதே வேளையில் வெள்ளம் பெருக்கெடுத்து, உடைப்புகள் ஏற்பட்டு பல்வேறு பாதிப்புகளினால் அவதிப்படும் பல பகுதிகளை பார்க்கும் போது வேதனையாகவும் இருக்கிறது. இதற்கு காரணம் இதனால் அதிகமாக பாதிக்கப்படுபவர்கள் ஏழை எளிய மக்களே.

தற்பொழுது வீடு கட்டும் கலாச்சாரம் அனைத்து தரப்பு மக்களிடமும் பரவி வருவதை பார்க்க முடிகிறது. கடன் வாங்கியாவது அழகான வீடு கட்டி வாழ வேண்டும் என்ற எண்ணம் பரவலாகக் காணப்படுகிறது. அழகான வீடுகள் அவசியம் தான். ஆனால் அதைவிட வெள்ளம், புயல், நெருப்பு, வெப்பம் ஆகிய சீற்றங்களால் பாதிக்கப்படாத வகையில் திட்டமிட்டு வீடுகளைக் கட்ட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

மழைநீரை பூமிக்கு அடியில் போக விடாமல் வீட்டைச் சுற்றிலும் சிமெண்டு தரை போட்டு மூடிவிடாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

திறந்தவெளியில் மலம் கழித்து பல்வேறு வியாதிகளை உருவாக்கும் கிருமிகளை பரவ விடாமல் தடுக்க வேண்டுமாயின் வீட்டில் கழிப்பறை கட்டுவதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். குழந்தைகள், முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் சிரமமின்றி புழங்குவதற்கேற்ப வீட்டின் அமைப்பை திட்டமிட்டு உருவாக்குவது அவசியமாகிறது.

மாற்றுத் திறனாளிகள் தினம் அனுசரிக்கும் இந்த மாதத்தில், மாற்றுத் திறனாளிகளிடத்தில் அனுதாபத்தை மட்டும் காட்டாமல், அவர்களுக்கு அவரவர் திறமைக்கு ஏற்ப பயிற்சிகள், கல்வி, நிதி வசதி ஆகியவைகள் பெறுவதற்கு வாய்ப்புகள் அளித்து, அவர்கள் உரிமை கண்ணோட்டத்தோடு இவைகளைப் பெற்று வளர்ச்சி அடைய வழிவகை செய்வதே இந்த சமுதாயம் செய்யும் மிகப்பெரிய உதவியாகும்.

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் உரிமையுடன் வாழவும், உரிமைகளைப் பறிப்பதற்கு முயற்சிப்பவர்களை தண்டிக்கவும் சட்டத்தில் இடம் உண்டு. இதை ஒவ்வொரு சாமான்ய மனிதனும் உணர்ந்திருக்க வேண்டும்.

மனிதகுலம் அடிமைத்தனத்திலிருந்து விடுபட வேண்டுமென பாடுபட்ட இயேசுபிரான் பிறந்த நாளை கொண்டாடும் அனைவருக்கும் முற்றம் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

எய்ட்ஸ் நோயை வென்றிடுவோம்...

உலக எய்ட்ஸ் தினம்-டிசம்பர் 1

'எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம்' ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் முதலாம் தேதி அனுசரிக்கப்படுகிறது. இந்நாளில் எய்ட்ஸ் நோய் பற்றியும், அதன் கொடிய விளைவுகள் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை பிரதான நோக்கமாகக் கொண்டு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

எய்ட்ஸ் தினம் பற்றிய எண்ணக்கரு 1988ல் நடைபெற்ற, எய்ட்ஸ் குறித்த உலக சுகாதார அமைச்சர்கள் மாநாட்டில் உருவானது. இம்மாநாட்டிலேயே எய்ட்ஸ் தினம் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டதுடன், டிசம்பர் மாதம் முதலாம் தேதி இத்தினத்தை அனுசரிக்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை முடிவெடுத்தது. இதையடுத்து அரசுகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இந்நாளை உலகம் முழுவதும் நடைமுறைப்படுத்தி வருகின்றன. ■

ஊனம் என்பது தடையல்ல...

சர்வதேச மாற்றுத்திறனாளர் தினம் – டிசம்பர் 3

ற்றுத் திறனாளிகளின் பிரச்சனைகளை சர்வதேச ரீதியில் அனைத்து மக்களும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்குரிய இடத்தையும், உரிமைகளையும் வழங்குவதில் யாரும் பின்நிற்கக்கூடாது என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டும் என்ற நோக்குடன் உலகளாவிய அளவில் சர்வதேச மாற்றுத் திறனாளர் தினம் ஆண்டுதோறும் டிசம்பர் 3ஆம் நாள் அனுசரிக்கப்படுகிறது.

பல நாடுகள் அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள், மாற்றுத் திறனாளிகளின் நிலையை உயர்த்துவதற்கான செயல் திட்டங்களைத் தீட்டி, அவர்களின் முயற்சிகளுக்கு உறுதுணை புரிந்து வருகின்றன. அத்துடன் மாற்றுத் திறனாளர்களின் நிலையை சமுதாயத்தில் உயர்த்த, சிறப்பு கருத்தரங்குகள், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்வதுடன், ஊடகங்கள் மூலமாக விழிப்புணர்வு விளம்பரங்கள் மற்றும் பிரச்சாரங்களையும் மேற் கொள்கின்றன.

மாற்றுத் திறனாளிகள் உலகளாவிய அளவில் பல்வேறு சாதனைகளைப் புரிந்து, ஊனம் என்பது முயற்சிகளுக்குத் தடையாக அமைவதில்லை என்பதை உணர்த்தி வருகின்றனர். கல்வி, கலை, கலாச்சாரம் என்ற அடிப்படையில் இத்தகைய சாதனைகள் தொடர் கின்றன. விளையாட்டுத் துறையிலும் மாற்றுத் திறனாளிகள் சாதனைகள் பலவற்றைப் படைத்து வருகின்றனர்.

உரிமைகள் காத்திடுவோம்...

உலக மனித உரிமைகள் தினம்-டிசம்பர் 10

உலக மனித உரிமைகள் நாள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ஆம் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. 1948 டிசம்பர் 10ஆம் நாள் ஒன்றுகூடிய ஐக்கிய நாடுகளின் பொது அவையால் அனைத்துலக மனித உரிமைகள் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டதை பெருமைப்படுத்தும் பொருட்டு இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபை, உலகின் அனைத்து நாடுகளுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க 1950 முதல் உலக மனித உரிமைகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு தனி மனிதனும் தான் வாழ்வதற்கான உரிமையை பெறுவதும், மற்ற மனிதரையும் வாழ விடும் நெறிமுறையை உணர்த்துவதுமே இந்நாளின் முக்கிய கருத்தாகும். எல்லா மனிதர்களும் சுதந்திரமானவர்கள் என்பதையும், உரிமையிலும், கண்ணியத்திலும் ஒருவருக்கொருவர் சமானமானவர்கள் என்பதையும் இந்த நாள் வலியுறுத்துகிறது. இனம், நிறம், பாலினம், மொழி, மதம், அரசியல், நாடு, சமுதாய தோன்றல், சொத்து, பிறப்பு அல்லது சமூக உயர்வு போன்ற எந்தவித வேறுபாடுகளும் இன்றி ஒவ்வொரு மனிதனும் வாழ்வதன் அவசியத்தையும் உணர்த்தவே இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

மலைகளின் இளவரசி என்று அழைக்கப்படும் கொடைக்கானல் மிகச் சிறந்த மலைவாசஸ்தலம்

மலைகளின் இளவரசி
கொடைக்கானல்

திண்டுக்கல் மாவட்டத்தில் இருக்கும் ஒரு நகராட்சியான கொடைக்கானல் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டின் மலைகளின் இளவரசி என்று அழைக்கப்படும் கொடைக்கானல் மிகச் சிறந்த மலைவாசஸ்தலமாகும். 22 சதுர கிலோ மீட்டர் பரப்பு கொண்ட இந்த மலைவாழிடம் கடல் மட்டத்திலிருந்து 2133 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர்கள் இங்கே பரவலாக வளர்கின்றன. அதனால் இம்மலையில் உள்ள முருகன் கோவில் குறிஞ்சி ஆண்டவர் கோவில் என்று அழைக்கப்படுகிறது. கோடை காலங்களில் அதிகபட்ச வெப்ப நிலை 19.8 டிகிரி சென்டிகிரேடும், குறைந்தபட்ச வெப்ப நிலை 11.3 டிகிரி சென்டிகிரேடும் இருக்கும்.

கி.பி. 1821ல் ஆங்கிலேயரான லெப்டினனட் பி.ச.வார்டு என்பவர் இப்பகுதியை நில ஆய்வு செய்தார். இந்தியாவில் அரசு பணியில் இருந்த ஆங்கிலேயர்கள் வசிக்க ஏற்ற இடமாக கொடைக்கானல் இருப்பதால், இங்கு 1845ல் குடியிருப்புகளை உருவாக்கினார். போதிய போக்குவரத்து வசதி இல்லாததால் ஆங்கிலேயர்கள் குதிரைகளைப் பயன்படுத்தி கொடைக்கானலுக்கு வந்து தங்கினர். பின்னர் 1914ஆம் ஆண்டில் சாலை வசதிகள் உருவாக்கப்பட்டன. ஆங்கிலேயர்கள் காலத்தில் வசதி படைத்தவர்கள் மட்டும் அனுபவித்து வந்த கோடைவாசஸ்தலமான கொடைக்கானல் தற்போது அனைவரும் சென்று வரும் சுற்றுலா தலமாக உருவாகியுள்ளது.

சென்னை – திருச்சி – மதுரை – திருநெல்வேலி – கன்னியாகுமரி ரயில் பாதையில், திண்டுக்கல் மற்றும் மதுரைக்கு இடையில் அமைந்துள்ள கொடை ரோடு என்ற ஊரில் இறங்கி அங்கிருந்து 80 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கொடைக்கானலுக்கு வாகனங்கள் மூலம் செல்லலாம். திண்டுக்கல், மதுரை, தேனி, ஒட்டன்சத்திரம், பழனி ஆகிய ஊர்களில் இருந்து கொடைக்கானலுக்கு அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

கார் போன்ற வாகனங்களில் செல்பவர்கள் வத்தலகுண்டு வழியாகவும், பழனி மலை வழியாகவும், பாச்சலூர், தாண்டிக்குடி மலைப்பாதைகள் வழியாகவும் செல்லலாம். தேனியில் இருந்து கொடைக்கானல் செல்பவர்கள் பெரியகுளம், தேவதானப்பட்டி தாண்டியவுடன் காட்ரோடு என்ற இடத்தில் கொடைக்கானல் செல்லும் பாதை பிரிவதால் அங்கிருந்தே செல்லலாம்.

“ ஆங்கிலேயரான லெப்டினனட் பி.ச.வார்டு என்பவர் 1845ல் குடியிருப்புகளை உருவாக்கினார். போதிய போக்குவரத்து வசதி இல்லாததால் ஆங்கிலேயர்கள் குதிரையைப் பயன்படுத்தி கொடைக்கானலுக்கு வந்து தங்கினர். ”



கொடைக்கானல் மலையில் பழங்குடியின மக்கள் ஏராளமாக வசிக்கின்றனர். இவர்களால் பல்வேறு வகையான பயிர்கள், பழ வகைகள், கீரைகள், காய்கள் மற்றும் மலர் வகைகள் என ஏராளமானவைகள் விளைவிக்கப்படுகின்றன. கோடைக்கானலில் நிலவும் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப பயிர்களின் தன்மையும், மக்களின் வாழ்க்கைத் தரமும் விளங்குகின்றது.

இப்பகுதியில் இயற்கை எழில் கொஞ்சும் பல பகுதிகள் உள்ளன. அடுக்கடுக்கான மலைத்தொடர்கள், அவைகளில் அமைக்கப் பட்டுள்ள வீடுகள், தோட்டங்கள், ஆர்ப்பரித்துக் கொட்டும் அருவிகள், கிடுகிடு பள்ளத்தாக்குகள், விலங்கினங்கள், பறவையினங்கள் என கொடைக்கானல் மிகச் சிறந்த சுற்றுலாத் தல மாக இருப்பதால் நாள்தோறும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

கொடைக்கானலில் பார்க்க வேண்டிய இடங்கள்

பிரையண்ட் பார்க், தொலைநோக்கி நிலையம், கோக்கர்ஸ் வாக், தூண் பாறைகள், கவர்னர் தூண், அப்பர்லெக், குணா குகைகள், தொப்பித் தூக்கிப் பாறைகள், மதிகெட்டான் சோலை, செண்பகனூர் அருங்காட்சியகம், 500 வருட மரம், டால்பின்ஸ் மூக்குப் பாறை, பேரிஜம் ஏரி, பியர்சோலா நீர்வீழ்ச்சி, அமைதி பள்ளத்தாக்கு, குறிஞ்சி ஆண்டவர் கோவில், செட்டியார் பூங்கா, படகுத்துறை, வெள்ளி நீர்வீழ்ச்சி, கோல்ஃப் மைதானம் போன்ற ஏராளமான இடங்கள் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அமைந்துள்ளன.

மிகச் சிறந்த சுற்றுலாத் தலமான கொடைக்கானலுக்கு நீங்களும் ஒருமுறை குடும்பத்துடன் சென்று இயற்கை அழகை ரசித்துவிட்டு வாருங்களேன்.

கவனம் தேவை... கன்று வளர்ப்பில்

பிறந்த கன்றுக்கு சீம்பால் போதிய அளவு கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது என்று சென்ற இதழில் எழுப்பப்பட்ட கேள்விக்கான பதில்...

> “ கன்றுகள் 6 மாதம் வரை பாலை குடித்து வளரக் கூடியவை. இந்த காலங்களில் கன்றின் எடையில் 10 சதவிகிதம் பால் என்ற கணக்கில் பாலை குடிக்க விடுதல். கன்றுகளுக்கு நல்ல திடகாத்திரமான வளர்ச்சியை ஏற்படுத்தும். ”

கன்றுகளுக்குத் தேவையான சீம்பால் கிடைக்கவில்லை என்றால் சீம்பாலுக்குப் பதிலாக, பசும்பால் 600 மில்லி, சுத்த மான தண்ணீர் 300 மில்லி, ஆமணக்கு எண்ணெய் 1/2 தேக்கரண்டி, ஒரு கோழி முட்டை ஆகியவற்றை சேர்த்து நன்கு கலக்கிக் கொடுப்பது நல்லது.

கன்றுகள் 6 மாதம் வரை பாலை குடித்து வளரக் கூடியவை. இந்த காலங்களில் கன்றின் எடையில் 10 சதவிகிதம் பால் என்ற கணக்கில் பாலை குடிக்க விடுதல், கன்றுகளுக்கு நல்ல திடகாத்திரமான வளர்ச்சியை ஏற்படுத்தும்.

கன்று பிறந்த 5ஆம் நாள் கால்நடை மருத்துவரின் ஆலோசனையின் பேரில் குடற்புழு நீக்க மருந்து தர வேண்டும். மீண்டும் 20 நாட்கள் கழித்து இரண்டாவது முறையாக குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும். அதன் பிறகு 2 மாதத்திற்கு ஒருமுறை வீதம் 6 மாத வயதை அடையும் வரை குடற்புழு நீக்க மருந்து கொடுக்க வேண்டும். இதனால் கன்றுகளுக்கு கழிச்சல் போன்ற நோய்களும், இறப்பு சதவிகிதமும் குறைவதோடு, கன்றுகள் நல்ல வளர்ச்சியையும் அடையும்.

கன்று பிறந்த 15 முதல் 30 நாட்களுக்குள் கொம்பின்முளைகுருத்தைநீக்கவேண்டும். இதனை கால்நடை மருத்துவமனைகளில் இலவசமாக செய்து கொள்ளலாம். கொம்பு நீக்குவதால் கன்றுகள் பார்ப்பதற்கு அழகாக இருப்பதோடு, கொம்பினால் ஏற்படும் விபத்துகளையும் தவிர்க்கலாம்.

கன்றுகள் மண் தின்பதை தவிர்க்க தாது உப்புக் கட்டிகள் கொடுக்க வேண்டும். மூன்று வாரம் ஆனபின் கன்றுகளுக்கு தரமான பசும்புல், கலப்புத் தீவனம் மற்றும் வைக்கோல் ஆகியவைகளைக் கொடுக்கலாம். கன்று ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்க உடற்பயிற்சி மிகவும் அவசியம்.

‘பால் ஊட்டி வளர்த்த கன்று’ சோடை போகாமல் நோய் நொடியின்றி வளர்ந்து தாய்மையை அடைய என்ன செய்ய வேண்டும்? அதை அடுத்த இதழில் பார்ப்போம்.

டாக்டர் பி. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
சென்னை.

(தொடரும்)

மகளிர் வாழ்வு வளம் பெற...
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மகத்தான சாதனைகள்

(16.05.2011 முதல் 30.09.2014 வரை)

அனைத்துத் துறைகளிலும் சாதனைகள் பல புரிந்து வரும் பெண்கள் பொருளாதார ரீதியிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்ற உன்னத நோக்குடன், மகளிர் வாழ்வு வளம் பெறுவதற்காகப் பல்வேறு திட்டங்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலுடன், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள் வாயிலாக முனைப்புடன் செயல்படுத்தப்படுகின்றன.

சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன் இணைப்பு

ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் 2011–12ஆம் ஆண்டில் 65,000 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ரூபாய் 15,000 வீதம் 22,214 ஊரக சுய உதவிக் குழுக்களுக்கும், ரூபாய் 10,000 வீதம் 20,000 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கும் ஆக மொத்தம் 42,214 குழுக்களுக்கு சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2012–13ஆம் ஆண்டில் 11,144 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூபாய் 10,000 வீதம் சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு வங்கிகள் மூலம் கடந்த 3 வருடங்களில் மட்டும் 15,963 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஊக்கத் தொகை

தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புற அண்டை வீட்டு கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற 9,931 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 99.31 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தொழிற்திறன் பயிற்சிகள்

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தொழிற்பயிற்சியும், வேலைவாய்ப்பும் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், இளைஞர் தொழிற்திறன் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 44,709 இளைஞர்களுக்கு தொழிற்திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அதில் 32,889 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது. சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தொழிற்திறனை மேம் படுத்துவதற்காக 11,618 பெண்களுக்கு தொழிற்திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

கலாச்சாரப் போட்டிகள்

சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமையை வலுப்படுத்தவும் மற்றும் குழு உணர்வை உருவாக்கும் நோக்கத்திலும், வட்டார மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே 2013–14ஆம் ஆண்டில் ரூபாய் 160 இலட்சம் செலவில் கலாச்சாரப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

கல்லூரிச் சந்தைகள்

சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை மேம் படுத்தி, கல்லூரி மாணவர்களிடையே பிரபலப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும் 32 மாவட்டங்களில் 329 'கல்லூரி சந்தைகள்' நடத்தப்பட்டு, ரூபாய் 445.89 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அடையாள அட்டை

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் முதற்கட்ட மாக செயல்படுத்தப்படும் 15 மாவட்டங்களைச் சார்ந்த 60 வட்டாரங்களில் உள்ள 5.18 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தனி நபர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்

மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தை உருவாக்கி தற்போது செயல்பட்டு வரும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி, அவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து அதன் மூலம் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை மேம்படுத்தி மாநில அளவில், தேசிய மற்றும் சர்வதேச அளவில் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மகளிர் மேளா விற்பனைக் கண்காட்சி

சுய உதவிக் குழு மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக மகளிர் மேளா என்ற பெயரில், விழாக்காலங்களில் சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 9 மகளிர் மேளா விற்பனைக் கண்காட்சிகள் நடைபெற்றுள்ளன.

வணிகக் குறியீடு

2012–13ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு அரசு, 'மதி' வர்த்தக பெயர் மற்றும் வணிகச் சின்னத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. 'மதி' வர்த்தக பெயர் மற்றும் வணிக சின்னம் பதிவு செய்யப்பட்டு அதற்குரிய சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

மதி பஜார் இணையதளம்

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை இணையம் மூலம் சந்தைப்படுத்தும் வகையில், 'மதி பஜார்' (Mathi Bazaar) எனும் பெயரில் புதிய இணையதளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு விருது

பெண்களுக்கு எதிராக நடைபெறும் சமூக அநீதிகள் மற்றும் வன்கொடுமைகளுக்கு எதிராக ஒன்று கூடி போராடும் சுய உதவிக் குழு பெண்களை ஊக்குவித்திட விருதும், ரூ. ஒரு இலட்சம் பரிசும் வழங்கப்படவுள்ளது. இந்த விருதிற்காக 2 சுய உதவிக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களையும் 100 விழுக்காடு கற்றவர்களாக உருவாக்கும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விருதும், ரூ. 50,000/- ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது. 12 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் இவ்விருதினைப் பெற்றுள்ளன.

வங்கி முகவர்கள் நியமனம்

2013-14ஆம் ஆண்டில் நிதி உள்ளாக்கத்தை வலியுறுத்தி 1000 வங்கி முகவர்களை சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து நியமிக்க அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை மகளிர் திட்டத்தின் கீழ் 3176 சுய உதவிக் குழு பெண்கள் வங்கி முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்

ஒரு கிராமம் - ஒரு உற்பத்திப் பொருள்

சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் தரமும் விற்பனையும் மேம்பட பொருளாதார தொழில் தொகுப்புகள் கண்டறியப்பட்டு, 2012-13ஆம் நிதியாண்டில் 'ஒரு கிராமம் - ஒரு உற்பத்திப் பொருள்' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பரீட்சார்த்த முறையில் 161 தொழில் தொகுப்புகள் அடையாளம் காணப்பட்டுள்து.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடுகள்

மாநிலத்திலுள்ள 385 வட்டாரங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 265 வட்டாரங்களில் 3 கட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 120 வட்டாரங்களில் தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக 2012-13ஆம் ஆண்டு 60 வட்டாரங்களில் உள்ள 2323 கிராம ஊராட்சிகளிலும், 2013-14ஆம் ஆண்டு இரண்டாம்கட்டமாக 110 வட்டாரங்களில் உள்ள 3491 கிராம ஊராட்சிகளிலும் மற்றும் மூன்றாம்கட்டமாக 2014-15ஆம் ஆண்டு 95 வட்டாரங்களில் உள்ள 2488 கிராம ஊராட்சிகளிலும் வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படுகிறது.

2390 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் முதல்கட்டமாகவும், 3074 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் இரண்டாம் கட்டமாகவும் அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது கட்டத்தில் திட்ட செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திட்ட செயல்பாடுகளை கண்காணிப்பதற்காக 1683 தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2013-14ஆம் ஆண்டில், ஒரு கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கு ரூ. 10 இலட்சம் வீதம் 2323 கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கு சமுதாய நிதியாக ரூ. 232.20 கோடி வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு, அதில் 2390 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு முதல் தவணையாக ரூபாய் 4.00 இலட்சம் வீதம் ரூபாய் 95.60 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. ரூபாய் 6 இலட்சம் வீதம் 2வது தவணையாக 2390 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு விடுவிக்கப்படவுள்ளது.

2014-15ஆம் ஆண்டில், ஒரு கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கு ரூ. 10 இலட்சம் வீதம் 3491 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி யாக ரூ. 349.10 கோடி வழங்க, அரசிடம் நிதி அனுமதி வழங்க உரிய கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன் இணைப்பு

தொழிற்திறன் பயிற்சிகள்

கல்லூரிச் சந்தைகள்

மகளிர் மேளா விற்பனைக் கண்காட்சி

ஒரு கிராமம் - ஒரு உற்பத்திப் பொருள்

பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறைகள் அண்மைக்காலங்களில் அதிகரித்து வருவதாக தெரிய வருகின்றது.

வன்முறையை தவிர்த்திடுவோம் பெண்களைக்காத்திடுவோம்

உலகளாவிய ரீதியில் பெண்கள் இன்று பல விதமான வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். பெண்களுக்கு எதிரான வன்முறைகளை வெளி உலகிற்கு காட்டி, அதற்கான நியாயமான தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காக சர்வதேச மகளிர் தினம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினம் ஆகியவை முன்வைக்கப்படுகின்றன. இருப்பினும் இத்தகைய வன்முறைகள் குறைந்ததாக இல்லை. இத்தகைய வன்முறைகளுள் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுபவையும், வெளியே தெரிய வருபவையும் மிகவும் சொற்பமானவையே. வெளியே வராதவையாகவும், சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படாதவையாகவும், மூடி மறைக்கப்படுபவைகளாகவும் உள்ளவை மிக அதிகமானவைகளாகும்.

பெண்கள் மீதான வன்முறை இன்றைய சமூகத்தில் பற்பல வடிவங்களில் வெளிப்படுகின்றன. தொழிற்சாலைகளில், அலுவலகங்களில், மருத்துவமனைகளில், பாடசாலைகளில்... என அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த அமைப்புகளில் உள்ள முதலாளிகள், நிர்வாகிகள், கண்காணிப்பாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், சில ஆசிரியர்கள், அதிகாரம் உள்ளவர்கள், நிறுவனத் தலைவர்கள் போன்றவர்களாலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம் பெறுகின்றன. மறுபுறம் குடும்ப உறுப்பினர்களாலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பெண்கள் வன்முறைக்கு ஆளாகின்றனர்.

பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறைகள் அண்மைக்காலங்களில் அதிகரித்து வருவதாக தெரிய வருகின்றது. குறிப்பாக உடல் ரீதியாக, பாலியல் ரீதியாக, பணம் அல்லது பொருளாதார ரீதியாக, உளவியல் ரீதியாக, சைகை மூலமான எச்சரிக்கையாக, வேறு நபர்களைத் தூண்டிவிட்டு எச்சரிக்கை செய்வதாக, அச்சுறுத்தலின் கீழ் தன் விருப்பத்திற்கு மாறாக நடக்கச் செய்வதாக, தனிமைப்படுத்தி விடுவதாக, சூழ்ச்சி மனோபாவத்துடன் நடப்பதன் மூலமாக, சுயகௌரவம் தன்மானத்தை இழக்கும்படி செய்வது, அச்சத்தை அல்லது பீதியை ஏற்படுத்துவது, உடல்நலக்குறைவை ஏற்படுத்துவது அல்லது மருத்துவ சிகிச்சையை புறக்கணிப்பது போன்றவைகள் குடும்ப வன்முறைக்கு எடுத்துக்காட்டாகும்.

மேலும் இந்தியா போன்ற நாடுகளில் வரதட்சணை காரணமாகவும் பல பெண்கள் வன்முறைக்கு ஆளாகின்றனர். குடும்ப வன்முறையில் பெரும்பாலானவை வெளியில் தெரியாமல் மறைக்கப்படுகின்றன என்பது கவலைக்குரிய நிகழ்வாகும். குடும்ப வன்முறை இனம், சமயம், பால், வயது போன்ற வேறுபாடின்றி யாவருக்கும் நடக்கலாம். இந்நிலையானது வருமானத்தில் பற்றாக்குறையை ஏற்படுத்தி கல்வி நிலையில் பின்னடைவை ஏற்படுத்தத் தவறுவதில்லை.

பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் எதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் உடல் ரீதியான, உணர்வுப்பூர்வமான/உளவியல்ரீதியான, பாலியல்ரீதியான, பொருளாதாரரீதியான, வாய்மொழி மற்றும் நவீன தொழில் நுட்ப ரீதியான வன்முறைகளாக கீழ்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

உடல் ரீதியான வன்முறைகள்

கன்னத்தில் அறைதல், அடித்தல், கையை முறுக்குதல், கூரிய ஆயுதத்தால் குத்துதல், குரல்வளையை நசுக்குதல், எரித்தல்,

மூச்சு திணறடித்தல், உதைத்தல், பொருளொன்றினால் அல்லது ஆயுதமொன்றினால் பயமுறுத்துதல், அடித்தல், தள்ளுதல், குத்துதல் மற்றும் நபர் ஒருவருக்கு உடல் ரீதியிலான காயங்களை ஏற்படுத்தும் விதத்தில் வன்முறையின் ஏதாவது வேறு வடிவமைப்பு மற்றும் கொலை ஆகியன உட்பட நபர் ஒருவருக்கு எதிராக திசை திருப்பப்பட்டுள்ள உடல் ரீதியிலான தவறாக நடத்தப்படுதலின் அல்லது மூர்க்கத்தனத்தின் ஏதாவது அமைப்பே உடல் ரீதியான வன்முறையாகும்.

உணர்வுப் பூர்வமான / உளவியல் ரீதியான வன்முறைகள்

நபர் ஒருவரை உணர்ச்சிரீதியாக குழப்புகின்ற அல்லது பாதிப்பு ஏற்படுத்துவதை நாடி நிற்கின்ற வன்முறையின் ஏதாவது ஒரு வடிவமே உணர்வுப் பூர்வமான அல்லது உளவியல் ரீதியான வன்முறையாகும். இது தொடர்பாகஏசுதல்,பயமுறுத்துதல்,சிறுமைப்படுத்துதல்,கத்துதல்,வீட்டுக்கு கட்டுப்படுத்துதல், மேற்பார்வை, கைவிடுதலின் அல்லது துஷ்பிரயோகத்தின் பயமுறுத்தல்கள், பொருட்களை அழித்தல், தனிப்படுத்துதல் மற்றும் தொடர்ச்சியாக இகழ்தல் ஆகியனவற்றை உள்ளடக்கக் கூடும். பெருமளவு பால்நிலை அடிப்படையிலான வன்முறை உணர்வுப்பூர்வமானதும், உளவியல் ரீதியிலானதுமான வன்முறையில் விளைகின்றது.

பாலியல் ரீதியான வன்முறைகள்

பெண்களுக்கு எதிரான வன்முறைகளுள் பாலியல் வன்முறையும் பிரதான இடத்தை வகிக்கின்றது. பாலியல் வன்முறை எனும்போது விருப்பத்திற்கு மாறாக வற்புறுத்தி உறவு கொள்ள நிர்ப்பந்திப்பது, விருப்பத்திற்கு மாறாக பாலியல் தூண்டல்களை ஏற்படுத்தக்கூடியவாறான நடத்தைகள் புரிதல், ஏமாற்றி அல்லது ஆள்மாறாட்டம் செய்து உறவு கொள்ளச் செய்தல், ஏதேனும் ஒரு உணவுப் பொருளுடன் அல்லது பானத்துடன் போதை தரக்கூடிய பொருளைக் கலந்து கொடுத்து உறவு கொள்வது, துணையின் சம்மதமில்லாமல் உறவு கொள்வது என்பனவும் பாலியல் வன்முறைக்குள் அடங்குகின்றன.

பொருளாதார ரீதியான வன்முறைகள்

நிதிசார் அல்லது பொருள் வளங்களை ஈட்டுவதற்கு, நன்மையடைவதற்கு அத்துடன் அனுபவிப்பதற்கு நபர் ஒருவரின் சுதந்திரத்தைத் தடுக்கின்ற, பிடுங்கிக் கொள்கின்ற அல்லது தர மறுக்கின்ற ஏதாவது செயற்பாடு அல்லது முயற்சி பொருளாதார துஷ்பிரயோகமாகும். வாழ்வாதார மற்றும் தனிப்பட்ட செலவினங்களுக்காக நிதியை வழங்க மறுத்தல், நிதிசார் பங்களிப்பதற்கு நிராகரித்தல், உணவு மற்றும் அடிப்படைத் தேவைகளை மறுத்தல், தொழிலுக்கான அடைதலைக் கட்டுப்படுத்துதல் அல்லது நிர்ப்பந்தித்தல் போன்ற செயல்பாடுகள் பொருளாதார ரீதியான வன்முறைகளாகும்.

> **இன்று பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி, நாளைய சமூகத்திற்கு தோல்வியை ஏற்படுத்தி விடும். எனவே பெண்களை வன்முறையிலிருந்து காத்திட அனைவரும் உறுதி ஏற்றிடுவோம்.**

நவீன தொழில்நுட்பம் சார்ந்த வன்முறைகள்

நவீன காலத்தில் e - mail, SMS, MMS, தொலைபேசி, செல்பேசி, தபால் போன்ற தொடர்பு சாதனங்களின் ஊடாக அவசியம் ஏதும் இல்லாமல் மீண்டும் மீண்டும் தொடர்பு கொண்டு தொல்லை கொடுத்தல் அல்லது அச்சுறுத்துதல், குறிப்பிட்ட பெண்கள் மீது அவதூறு பேசுதல் அல்லது அவதூறு பரப்புதல், அவ்வாறு குறிப்பிட்ட நபர் பற்றிய அத்தகவல் மற்றும் சுய தகவல்களை பிறரின் பார்வைக்கு வைத்தல், இதற்காக இணையம் அல்லது ஏனைய தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துதல், தனியார் நிறுவனங்களை சேவைக்கமர்த்தி குறிப்பிட்ட நபர் குறித்த இரகசியத் தகவல்கள் திரட்டல், பின் தொடர்தல், நண்பர்களை, அயலவர்களை அல்லது அலுவலகத்தில் உடன் வேலை செய்பவர்களை தொடர்பு கொள்ளல் போன்றவையும் பாலியல் தொல்லைகளாக கணிக்கப்படுகின்றன. மேலும் இரகசியமான முறையில் தனிமையில் காணப்படக்கூடிய பெண்களை புகைப்படம் பிடித்தல், பெண்களின் அந்தரங்க விஷயங்களை பகிரங்கப்படுத்துதல் என்பன வாய்மொழி மற்றும் நவீன தொழில்நுட்பம் சார்ந்த வன்முறைகளாகும்.

நகரமோ கிராமமோ வன்முறைகளினால் கூடுதலான அளவிற்கு பாதிக்கப்படுபவர்கள் இளம் பெண்களே என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் உண்மையாகும். பாதிப்புகளுக்குள்ளாகிய அனேக பெண்கள் தமது பாதிப்புகளுக்கான நிவாரணம் குறித்த எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை. பயம், சங்கடம் மற்றும் அந்நேரத்தில் சம்பவம் பற்றி சரிவர அறியாதது ஆகியனவே இதற்கான காரணமாகும். மேலும் பாதிக்கப்பட்டவர்களை சமூகம் ஏளனப் பார்வைக்கு உட்படுத்துவதும் பாதிப்புகள் வெளிவராமல் இருப்பதற்கு மற்றுமொரு காரணமாகும். இந்த நிலையில் குற்றமிழைத்தவரிடமிருந்து விலகிச்செல்வதே பொதுவானதாக இருக்கிறது. இதனால் குற்றமிழைத்தவர்கள் எளிதில் தப்பித்து விடுகின்றனர்.

இருப்பினும் ஒரு சில இடங்களில் குற்றமிழைத்தவருக்கு ஏச்சுகள், அடிகள் போன்றவையும் கிடைக்கின்றன. பெரும்பான்மையானவர்கள் சுய கௌரவம் காரணமாக நடந்த குற்றத்தை மூடி மறைக்கின்றனர். இத்தகைய போக்குகள் காரணமாக குற்றமிழைத்தவர்கள் மேலும் மேலும் குற்றங்களை செய்கின்றனர். இதன் காரணமாக உலகிலுள்ள பெண்களில் மூவரில் ஒருவர் தனது வாழ்நாளில் ஏதாவது ஒரு வடிவிலான வன்முறையினால் பாதிக்கப்படுகிறார். வாழ்வை நிர்மூலமாக்கிச் சமூகங்களைச் சிதைக்கும் ஒரு கொள்ளை நோயாக பெண்களுக்கு எதிரான வன்முறை காணப்படுகின்றது.

16 முதல் 44 வயதுக்கு இடைப்பட்ட பெண்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு எதிரான வன்முறைகளே மரணத்துக்கும், உடல் ஊனமாகுதலுக்கும் முக்கிய காரணியாக அமைகின்றன. இனப்பெருக்க வயதிலுள்ள பெண்களைப் பொறுத்தவரை புற்றுநோயைப் போன்று வன்முறைகளும் அவர்கள் மத்தியிலான மரணத்துக்கு முக்கிய காரணமாகின்றன. உலக சுகாதார நிறுவனம், அண்மையில் மேற்கொண்ட ஆய்வு ஒன்றில் 'உலகில் வீதி விபத்துகளையும், மலேரியா போன்ற நோய்களையும் விட பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்களின் உடல் ஆரோக்கியத்தைப் பாதிப்பதாகத்' தெரிவித்திருக்கிறது. வன்முறைகளை அனுபவிக்கும் பெண்கள் எச்.ஐ.வி.யின் தொற்றுக்கு இலக்காகும் ஆபத்தும் அதிகமாக இருப்பதாக தெரிய வந்திருக்கிறது.

ஆணுக்கு நிகராக சாதனைகள் பல படைத்து வரும் பெண்களுக்கு எதிராக நடத்தப்படும் வன்முறைகளை தடுத்து நிறுத்த வேண்டியது தற்போதைய அவசர அவசிய கடமையாகும். ஏனெனில் ஆண்களின் வெற்றிக்கு காரணம் பெண்களே என்பது நிதர்சனம்.

அழகுக் குறிப்புகள்

உடலுக்கு அழகும் வலிவும் தரும் இயற்கை பொருட்கள் பலவுண்டு. அவற்றுள் பழங்களும் முதலிடம் பெறுகின்றன. அத்தகைய பழங்கள் சிலவற்றை நாம் பார்க்கலாம்.

ஆப்பிள்

ரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்து சருமத்திற்கு பொலிவு தரும் பழமாக ஆப்பிள் உள்ளது. ஆப்பிளைக் கூழ் போல் செய்து, அதை முகத்தில் தேய்த்து, சிறிது நேரம் கழித்து கழுவினால் முகத்தில் உள்ள கருமை நீங்கி பொலிவு பெறும்.

ஆரஞ்சு

வைட்டமின் சி சத்து நிறைந்த பழமான இதை இரண்டாக வெட்டி அதை முகத்தில் தேய்த்து மசாஜ் செய்தால் சருமம் புத்துணர்ச்சி பெறும். ஆரஞ்சு தோலை வெயிலில் காய வைத்து தூளாக்கி, அதில் முல்தானி மட்டியும், தண்ணீரும் கலந்து குழைத்து முகத்தில் பூசி, அது காய்ந்த பின் குளிர்ந்த நீரால் கழுவி விட்டால் முகம் பளிச்சிடும்.

நேந்திரன் பழம்

இப்பழத்தின் உள்ளே இருக்கும் புள்ளி போன்ற கருப்பு விதைகளை நீக்கி விட்டு, பழத்தை கூழாக்கி முகத்தில் பூச வேண்டும். காய்ந்த பின்பு குளிர்ந்த நீரால் முகத்தை கழுவுங்கள். இது சருமத் திற்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்தும்.

ஒற்றுமை

சிறுகதை

ஒரு காட்டில் பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அந்த மிருகங்கள் அனைத்தும் ஒற்றுமையாக ஒன்றாக சுற்றித் திரிந்தன. மிருகங்களின் ஒற்றுமையைக் கண்ட அந்தக் காட்டின் ராஜா வான சிங்கம் மிகவும் மகிழ்ச்சியுடன், தன் ஆட்சியில் மிருகங்கள் யாவும் சண்டையின்றி ஒற்றுமையாக இருக்கின்றன என்று பெருமை யாக நினைத்துக் கொண்டது.

ஒரு நாள் சிங்கம் காட்டில் வசிக்கும் அனைத்து மிருகங்களையும் வரச் சொன்னது. அனைத்து மிருகங்களும் ஒரு இடத்தில் ஒன்று கூடின. மிருகங்களைப் பார்த்த சிங்கம், 'எனது அன்புக்குரிய நண்பர்களே! எனக்கு வயதாகி விட்டது. இன்னும் சில நாட்கள் தான் நான் உயிருடன் இருப்பேன் எனத் தோன்றுகிறது. எனவே எனக்குப் பிறகு ஆட்சியை சிறப்பாக நடத்திச் செல்ல ஒருவர் தேவை. அவரை உங்கள் மத்தியில் தெரிவு செய்யவே உங்களை

ஆனால் இரண்டு முயல்கள் மாத்திரம் அமைதி யாக நின்றன. அதைக்கண்ட சிங்கத்திற்கு கடும் கோபம் ஏற்பட்டது. அது முயல்களைப் பார்த்து 'உங்களுக்கு நான் சொன்னது புரியவில்லையா? என் பேச்சை மதிக்காதவர்களுக்கு என்ன தண்டனை தெரியுமா?' என்றது. அதற்கு முயல்கள் சிங்கத்தைப் பார்த்து, 'மகாராஜாவே! தயவு செய்து எங்களை மன்னியுங்கள். எங்களுக்குப் பதவி எதுவும் வேண்டாம். பதவிக்காக எங்களின் நட்பை எப்படி மறப்பது?' என்று கேட்டன. அதைக் கேட்ட சிங்கம், முயல்களைப் பார்த்து 'நட்பு பதவியில் இருந்தால் இருக்காதா? பதவி வேண்டாம் என்கிறீர்களே நீங்கள் என்ன முட்டாள்களா?' என்றது.

உடனே முயல்கள், 'நாங்கள் எப்படி சண்டையிடுவது? சிறுவயதிலிருந்தே ஒற்றுமை யாகவே இவ்வளவு நாளும் இருக்கிறோம். இனியும் அப்படியே இருக்க ஆசைப்படுகிறோம்,

நான் அழைத்தேன். ஆனால் எனக்கு உங்களில் யார் திறமையானவர் என்பது தெரியாததால் ஒரு போட்டி வைத்து அதில் வெற்றிப் பெறுபவரை எனக்கு பின் அரசராக நியமிக்க இருக்கிறேன்' என்றது சிங்கம்.

இதைக் கேட்ட மிருகங்களெல்லாம் ஆவலோடு 'என்ன போட்டி?' என்றன. உடனே சிங்கம் 'யார் தனது நண்பனுடன் சண்டையிட்டு வெல்கிறாரோ அவரே திறமைசாலியும் பலசாலியும் ஆவார். அவரையே நான் அரசராக நியமிப்பேன்' எனக் கூறியது. அதைக் கேட்டதும் மிருகங்கள் அனைத்தும் தங்களது நண்பர்களுடன் சண்டையிட தயாராகி நின்றன.

பதவிக்காக எங்களைப் பிரித்து விடாதீர்கள்' என்று சொல்லி அங்கிருந்து விலகிச் சென்றன.

முயல்கள் ஒற்றுமையுடன் செல்வதைப் பார்த்த சிங்கம், அங்கு இருந்த மிருகங்களைப் பார்த்து, 'பார்த்தீர்களா, அவற்றின் ஒற்றுமையையும் நட்பையும்!. நான் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் பதவிக்காக பிரியவே இல்லை. உங்களில் யார் ஒற்றுமையுடன் இருக்கிறீர்கள் என்பதை அறிவதற்காகத்தான் உங்களை நான் இங்கு வரவழைத்தேன். உங்களைப் பற்றி தெரிந்து கொண்டேன்' என்று கூறியது. இதைக் கேட்ட மிருகங்கள் அனைத்தும் வெட்கித் தலைகுனிந்தபடி நின்றன.

திருமதி. ப. கலைமதி,
மக்கள் தொடர்பு அலுவலர்,

வளமாக்கும் வங்கி சேவைகள் "சிறப்பு பார்வை"

உழவர் மன்றம்

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

உழவர் மன்றம் என்பது ஒரு இயல்பான (அ) முறைப்படி அல்லாமல் சாதாரணமாக ஒரு கிராமத்தில் செயல்படும் அமைப்பு ஆகும். இதில் குறைந்தது 10 விவசாயிகள் அங்கத்தினராக இருக்க வேண்டும். அதில் 3 நபர்கள் தலைவர், முதன்மை ஒருங்கிணைப்பாளர் மற்றும் தன்னார்வ தொண்டர் என அலுவலக பொறுப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்படுவர்.

உழவர் மன்றம் என்பது கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கான பொதுவான மன்றம் ஆகும். இந்த உழவர் மன்றங்கள் கிராமப்புறங்களிலுள்ள வங்கிக் கிளைகள், நபார்ட் வங்கியின் நிதி உதவி மற்றும் ஆதரவுடன் தொடங்கப்படுகிறது.

உழவர் மன்றங்கள் ஏன் துவக்கப்படுகிறது?

உழவர் மன்றங்கள், விவசாயிகள், வங்கிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் ஒருவருக்கொருவர் பயனடைய துவங்கப்படுகிறது.

உழவர் மன்றங்கள் யாரால் துவக்கப்படுகிறது?

பொதுத்துறை வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், வட்டார வளர்ச்சி வங்கிகள் (RRB) மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் (NGO) போன்றவர்களால் துவக்கப்படுகிறது.

உழவர் மன்றங்களின் அமைப்பு எப்படி?

உழவர் மன்றம் என்பது ஒரு இயல்பான (அ) முறைப்படி அல்லாமல் சாதாரணமாக ஒரு கிராமத்தில் செயல்படும் அமைப்பு ஆகும். இதில் குறைந்தது 10 விவசாயிகள் அங்கத்தினராக இருக்க வேண்டும். அதில் 3 நபர்கள் தலைவர், முதன்மை ஒருங்கிணைப்பாளர் மற்றும் தன்னார்வ தொண்டர் என அலுவலக பொறுப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்படுவர்.

அலுவலக பொறுப்பாளர்களின் பணி என்ன?

உழவர் மன்ற கூட்டங்களை நடத்துவது, விவசாய துறையில் உள்ள சிறப்பு நிபுணர்கள், வல்லுநர்களை அழைத்து விவசாயிகளுடன் விவசாயத்தைப் பற்றி கலந்துரையாடல் செய்ய ஏற்பாடுகள் செய்தல், குழுவின் வரவு / செலவு கணக்குகளை பராமரித்தல், வங்கி மற்றும் மாவட்ட / மாநில முக்கிய அரசு துறையினருடன் தொடர்பு கொண்டு, விவசாயிகளுக்கான நன்மைகளைப் பெற்றுத் தருதல் போன்றவைகள் அவர்களது பணிகளாகும்.

உறுப்பினர்கள் யார்?

கிராமத்திலுள்ளவர்கள் எல்லோரும், வங்கிக் கடனை வேண்டுமென்றே திரும்ப செலுத்தாதவர்கள் தவிர, மற்ற அனைவரும் இந்த மன்றத்தில் உறுப்பினர்களாகலாம். மன்றத்திற்கான செலவுகளை, உறுப்பினர்களின் பங்களிப்புகள் மூலம் (உறுப்பினர் சேர்க்கை, மாதாந்திர சேமிப்பு, இதர வருமானம்) மேற்கொள்ள வேண்டும்.

> "உழவர் மன்றம் என்பது ஒரு இயல்பான (அ) முறைப்படி அல்லாமல் சாதாரணமாக ஒரு கிராமத்தில் செயல்படும் அமைப்பு ஆகும்."

(தொடரும்)

சளி, இருமல், ஜுரம், ஆஸ்த்துமா போன்ற குளிர்கால நோய்களின் தாக்குதல் மக்களுக்கு மிகவும் சிரமத்தை கொடுக்கிறது.

குளிர்கால நோய்களை விரட்டுவோம்...!

அறிந்து கொள்வோம்

தற்போது குளிர் வாட்டி வதைக்கத் தொடங்கி விட்டது. சிறுவர்களும் முதியோர்களும் பனியின் தாக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். மாலையில் குளிர் காற்றின் தாக்குதல், இரவில் கொட்டும் பனி ஆகியவற்றின் காரணமாக வெளியில் நடமாடுவதையே தவிர்க்கின்றனர்.

குளிர்கால நோய்கள் குறித்தும், அதற்கான மருத்துவ முறைகள் குறித்தும் இப்பகுதியில் அறிந்து கொள்ளலாம்.

குளிர்காலம் வந்தாலே நோய்கள் ஏற்படுவது ஏன்?

குளிர்காற்றில் இருக்கும் வைரஸ் கிருமிகள் நமது உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி செல்களை பாதிப்பதால் நோய்கள் ஏற்படுகின்றன. குளிர்காலத்தில் வைரஸ் கிருமிகளின் ஆயுள் கொஞ்சம் அதிகமாக இருக்கும். குறிப்பாகக் கூறினால் நமது கைகளில் இருக்கும் வைரஸ் கிருமிகள் சுமார் 3 மணி நேரம் உயிருடன் இருக்கும். கைகளைக் குலுக்குதல், நெருங்கிப் பழகுதல் போன்ற செயல்களின் விளைவாக வைரஸ் கிருமிகள் எளிதில் மற்றவர்களுக்குப் பரவும்.

இந்த குளிர்கால நோய்களின் பாதிப்பில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?

அடிக்கடி கைகளை கழுவுதல், கிருமி எதிர்ப்பு சோப்புகளை பயன்படுத்துதல், வைட்டமின் சி சத்துள்ள உணவுகளை உண்ணுதல், மருத்துவர்களின் ஆலோசனைப்படி நோய் எதிர்ப்பு மருந்துகளை உபயோகித்தல் போன்ற நடவடிக்கைகளால் குளிர்கால நோய்களின் தாக்குதலில் இருந்து நம்மை காத்துக் கொள்ள முடியும். மேலும் பனி பெய்யும் நேரங்களில் வெளியில் செல்லும் போது குல்லாய், மப்ளர் ஆகியவற்றைப் பயன்படுத்துதல், காட்டன் உடைகளைத் தவிர்த்து, கம்பளி ஆடைகளை பயன்படுத்துதல், குளிர்பானங்களையும், ஈரம் அதிகம் உள்ள காய்கறிகளையும் தவிர்த்தல், சுட வைத்து ஆறிய தண்ணீரைப் பருகுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் குளிர்கால நோய்களைத் தவிர்க்கலாம்.

குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும் குளிர்காலத்தில என்ன பாதிப்புகள் வரும்?

குளிர் காலத்தில் காலை, மாலை நேரங்களில் குறைந்த காற்றே இருப்பதால் குழந்தைகள் மற்றும் வயதானவர்களுக்கு சுவாசக் கோளாறுகள் எளிதில் ஏற்படும். சரியான உணவுப் பழக்கம், நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதவர்களையும் குளிர்கால நோய்கள் உடனடியாகத் தாக்கும். மேலும் தொண்டையில் சதை வளர்ச்சியை (டான்சில்) உருவாக்கும் கிருமிகளின் வளர்ச்சி குளிர்காலத்தில் அதிகமாக இருக்கும்.

இவைகளைத் தவிர்க்க என்ன செய்யலாம்?

குளிர்ச்சியான உணவுகள், ஐஸ்கிரீம், குளிர்பானங்களை கட்டாயம் தவிர்க்க வேண்டும். பிரிட்ஜில் வைக்கும் உணவுப் பொருட்களை அப்படியே சாப்பிடுவதைத் தவிர்க்கவும். சாப்பிடுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு வெளியில் வைத்திருந்து நன்றாக சுட வைத்து சாப்பிட வேண்டும். பழங்கள் மற்றும் கீரை வகைகளை குறைவாக உணவில் சேர்க்கவும்.

> “ பருப்பு வகைகள், முட்டை, மிளகு சேர்த்த உணவுகளை சாப்பிடுவதுடன், பாலில் குறைந்த அளவு சர்க்கரை மற்றும் மிளகுத்தூள் சேர்த்துக் குடிப்பதன் மூலம் தொண்டை சார்ந்த பிரச்சனைகளையும் தவிர்க்கலாம். ”

பிளாஸ்டிக்கை குறைப்போம்! பசுமையோடு வாழ்வோம்!!

கரங்களை மட்டுமே அடைத்துக் கொண்டிருந்த பிளாஸ்டிக் பொருட்கள் தற்போது சிற்றூர்களிலும், கிராமங்களிலும் கூட பரவலாகி விட்டது. உலகமயமாக்களின் உன்னத வெளிப்பாடாக இன்று கிராமத்துப் பள்ளிச் சிறுமியும் கூட சீன சாக்லேட்டை சுவைத்து விட்டு, அதன் பிளாஸ்டிக் கவரை சாக்கடையில் எறிந்து விட்டுச் செல்கிறாள்.

முன்பு நாம் எறியும் குப்பைகளில் மிகக் குறைந்த அளவே இருந்த பிளாஸ்டிக் போன்ற மக்காத குப்பைகள், தற்பொழுது பாதிக்குப் பாதி இருக்கும் நிலை உருவாகி விட்டது. காய்கறி வாங்குவதில் ஆரம்பித்து, வயல் வரப்பில் உரம் போடுவது வரை நீங்காத இடத்தைப் பிடித்து விட்டது பிளாஸ்டிக். சிறிது சிறிதாக நம்முடைய தினசரி வாழ்வில் ஒன்றோடு ஒன்றாகி விட்ட பிளாஸ்டிக், மக்காத குப்பைகளில் ஒன்று என்பதைத் தெரிந்து கொள்வோம்.

முக்கோண அணுகுமுறையோடு பிளாஸ்டிக்கைப் பயன்படுத்த வேண்டும். தமிழக அரசு இவற்றை சீர்படுத்தும் வகையில், பிளாஸ்டிக் உட்பட்ட மக்காத குப்பைகளை மறுசுழற்சி செய்ய பல்வேறு திட்டங்களை வகுக்க மாவட்ட நிர்வாகங்களை முடுக்கி விட்டுள்ளது. தமிழகமெங்கும் பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைக்க, மறுபடி பயன்படுத்த, மறுசுழற்சி செய்ய மாவட்ட நிர்வாகங்களும் சீரான திட்டங்களைத் தீட்டி வருகின்றன.

அரசு மட்டும் ஒருபுறம் திட்டங்களை வகுத்தால் இந்த பசுமைக்கனவு கைகூடாது. மக்களும் ஒத்துழைப்பு நல்கி, தாங்கள் பயன்படுத்தும் பொருட்களில் மக்கிப் போகக் கூடிய மற்றும் மக்காத குப்பைகளைப் பிரித்து, இரண்டையும் சரியான முறையில் கையாள வேண்டும்.

■

> **“ காய்கறி வாங்க துணிப்பைகளை எடுத்துச் செல்வதிலிருந்து, பிளாஸ்டிக் பொருட்கள் ஒவ்வொன்றுக்கும் மாற்றுப் பொருள் பயன்படுத்தும் பட்சத்தில், பிளாஸ்டிக்பயன்பாட்டைவெகுவாகக்குறைத்து,நம்முடையமக்காதகுப்பைகளை கட்டுக்குள் கொண்டு வரலாம்! பசுமையான தமிழகத்தை உருவாக்கலாம்!! ”**

அதென்ன மக்காத குப்பைகள்?

உபயோகமில்லை என நாம் எறியும் குப்பைகளில் ஒரு சில, நாளடைவில் பூச்சிகளின் அரிப்பினாலோ, நீராலோ, ஈரப்பதத்தாலோ மண்ணோடு மண்ணாக மக்கிவிடும். ஒரு சில குப்பைகள் எத்தனை வருடமானாலும் மக்கவே மக்காது. பூச்சிகள் அரிக்கவே இயலாத வகையில் உறுதியான தன்மையோடு உள்ள பொருட்களே மக்காத பொருட்கள். இவற்றால் மழை நீர் பூமிக்குள் போகாமல் நாளடைவில் பூமி வறண்டு விடும் அபாயம் உண்டு. ஆடு மாடுகள் இந்தப் பொருட்களை உட்கொண்டு அதனால் அவை பல்வேறு நோய்களுக்கு உள்ளாகும் வாய்ப்பும் உண்டு. இவற்றை மற்றக் குப்பைகளோடு சேர்த்து எரித்து விட்டால் அவற்றால் காற்று மாசுபட்டு, மனிதர்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் கூட சுவாச நோய்கள் உண்டாகும்.

இப்படி மக்காத பொருட்களை என்னதான் செய்ய முடியும்?

முடிந்தவரை பிளாஸ்டிக் பொருட்களை தவிர்க்க வேண்டும் (Reduce). தவிர்க்க முடியாத நிலையில் வாங்கிய பிளாஸ்டிக் பொருட்களை முடிந்தவரை மீண்டும் மீண்டும் பயன்படுத்த வேண்டும் (Reuse). பயன்படுத்த முடியாத நிலையில் மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்த வேண்டும் (Recycle). இப்படி

வங்கியாளர்களுக்கான கருத்தரங்கு

கோவை மாவட்டத்தில் 06.11.2014 அன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்து வங்கியாளர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றும்போது, 'சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளில் வங்கியாளர்களின் சேவை, மாற்றுத் திறனாளிகளை கிராம வறுமை ஒழிப்பு சங்க நிதியுதவியுடன் மேம்படுத்துதல், அனைத்து சுய உதவிக் குழு பெண்களுக்கும் நிதி இணைப்பு' போன்றவற்றை விளக்கிக் கூறினார்.

அதேபோல், கோவை மாவட்ட புதுவாழ்வு திட்டத்தின் மாவட்ட மகமை சார்பாக பழங்குடியினர் மகளிர் ஒருங்கிணைந்த வேளாண் கூட்டமைப்பின் CLF Workshop கருத்துப் பட்டறை தொண்டாமுத்தூர் சாடிவயலில் 06.11.2014 மற்றும் 07.11.2014 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.

மாநில புதுவாழ்வு திட்ட இயக்குனர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. சுஜாதா ஜேக்கப், மாநில வாழ்வாதார வல்லுநர் திரு. பழனிவேல், மாநில வேளாண் ஆலோசகர் திரு. சுப்பரமணியம் கோவை மாவட்ட திட்ட மேலாளர் திரு. பிலிப்ஸ் இளையராஜா, வேளாண் ஆலோசகர் திரு. சேவியர், பால்வள ஆலோசகர் திரு. இளஞ்செழியன், மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பு அணியினர், மாவட்ட மகமை வாழ்வாதார அலகு நிர்வாகிகள் மற்றும் ஒத்த தொழில் கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் திருவண்ணாமலை, சேலம், வேலூர், திருவள்ளூர், விழுப்புரம், நாமக்கல், திருநெல்வேலி, கடலூர், தேனி, காஞ்சிபுரம் ஆகிய 10 மாவட்ட திட்ட மேலாளர்கள், சமூக வல்லுநர்கள் மற்றும் பழங்குடியினர் மகளிர் ஒருங்கிணைந்த வேளாண் கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

> **"'வேளாண்மை தொழிலை நீடித்த நிலைத்தன்மைப் பெறச் செய்ய வேண்டுமெனில் சந்தைத் தேவைகளுக்கு ஏற்ப பயிர் சாகுபடிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இயற்கை முறையில் வேளாண் பொருட்களுக்கு கூடுதல் வருமானம் பெற்றுத் தர வேண்டும்'"**

மதுரை

வங்கியாளர்களுக்கு பயிற்சி

மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் வங்கியாளர்களுக்கு வாழ்வாதார இயக்கம் குறித்த பயிற்சி முகாம் 06.11.2014 அன்று மதுரையில் நடைபெற்றது. இந்தப் பயிற்சி முகாமினை மதுரை மாவட்ட ஆட்சியர் முனைவர் இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மதுரை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு. அ. பாண்டியன், முன்னோடி வங்கி மேலாளர் திரு. முருகபிரபு, மதுரை மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சுபாஷ் நாத் மங்கள்ராம் மற்றும் மாவட்ட அளவிலான பல்வேறு வங்கிகளின் அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், புதுவாழ்வு திட்ட உதவித் திட்ட மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பல்துறை திட்ட விளக்கம் மற்றும் திட்ட செயலாக்கக் கூட்டம்

கால்நடை பராமரிப்புத் துறை, மீன் வளத்துறை மற்றும் பால் வளத் துறை ஆகிய அரசுத் துறைகளின் மூலம் பல்வேறு நலத்திட்டங்கள் ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை மேம் படுத்தும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி திட்டங்கள் கிராமங்களில் உள்ள ஏழை எளிய மகளிர்களை சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் முதற்கட்டமாக மேலே கூறப்பட்ட துறைகளை இணைத்து 'பல்துறை திட்ட விளக்கக் கூட்டம்' 2014 நவம்பர் 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் சென்னை நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம், கால்நடைத் துறை, மீன்வளத்துறை திட்டம்' ஆகியவைகளின் மூலம் செயல்படுத்த துரித நடவடிக்கை மேற்கொண்டார். அந்த நடவடிக்கைகளின் விளைவாக கால்நடைத் துறையின் திட்டங்கள் மூலம் 31 மாவட்டங்களைச் சார்ந்த சுமார் 8819 மகளிரும், மீன் வளத்துறையின் திட்டங்களின் மூலம் 10 மாவட்டங்களைச் சார்ந்த சுமார் 250 மகளிரும் பயன் பெற்று அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட நடவடிக்கைகள் நீங்கலாக பால் வளத்துறையின் மூலம் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ வசதி, பால் கொள்முதலுக்கான அத்தி யாவசிய உபகரணங்களை இலவசமாக வழங்குதல், கால்நடை தீவனத்தை மானிய விலையில் வழங்குதல், கால்நடைகளுக்கு குறைந்த தொகையில் காப்பீடு

> **"கால்நடைத் துறையின் திட்டங்கள் மூலம் 31 மாவட்டங்களைச் சார்ந்த சுமார் 8819 மகளிரும், மீன்வளத்துறையின் திட்டங்கள் மூலம் 10 மாவட்டங்களைச் சார்ந்த சுமார் 250 மகளிரும் பயன் பெற்று அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது."**

மற்றும் பால் வளத் துறை ஆகியவற்றைச் சார்ந்த மாவட்ட கோட்ட அலுவலர்கள் கலந்து கொண்டு தத்தம் துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மக்கள் நலத் திட்டங்களை விளக்கப் படக்காட்சிகள் (PPt) மூலம் விளக்கிக் கூறினர்.

அரசுத் திட்டங்களின் பயன்களை அறிந்த மகளிர் மேம் பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள், சம்பந்தப்பட்ட துறைகளின் மூலம் முடிவுறாத எஞ்சிய திட்டங்களை, ஏழை மக்களின் குறிப்பாக மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவே உருவாக்கப்பட்ட 'மகளிர் மேம்பாட்டு நிறுவனம்' மற்றும் 'புதுவாழ்வு செய்தல் போன்ற செயல்பாடுகளுக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி திட்டங்கள் அனைத்தும் 'மகளிர் மேம்பாட்டு நிறுவனம்' மற்றும் 'புதுவாழ்வு திட்டம்' ஆகிய இரண்டும் இணைந்து செயல்படுத்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண வேண்டும் என்ற நோக்கத்துடன் 'மகளிர் மேம்பாட்டு நிறுவனமும், புதுவாழ்வு திட்டமும்' இணைந்து செயல்படுவது ஏழை மக்களின் வெற்றிக்கு வித்தல்லவோ.

சேமிப்பு + சிக்கனம்



வங்கித் தொடர்பாளர்களாக இருப்பவர்கள் வங்கிக் கிளைகள் இல்லாத இடங்களில் வசிப்பவர்களுக்கும் வங்கிச் சேவை அளிக்க முடியும்.

திருமதி. உஷா அனந்தசுப்பிரமணியன்
பாரதீய மகிளா வங்கியின் தலைவர்

பாரதீய மகிளா வங்கியின் தலைவர் திருமதி. உஷா அனந்தசுப்பிரமணியன் அவர்களை நேரில் சந்தித்து, நமது சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த வங்கித் தொடர்பாளர்களான திருமதி. சுமதி, திருமதி. மகேஸ்வரி, திருமதி. உமாதேவி மற்றும் திருமதி. பாலாமணி ஆகியோர் நேர்காணல் செய்தனர். கடந்த முற்றம் இதழில் வெளிவந்த இந்த நேர்காணலின் தொடர்ச்சி...

சுமதி: வங்கித் தொடர்பாளர்கள் குறித்து உங்களின் கருத்து?

வங்கித் தொடர்பாளர்கள் என்ற கான்செப்ட் மிகவும் நல்ல கான்செப்ட் ஆகும். இந்தியாவில் ஆறு லட்சம் கிராமங்கள் உள்ளன. அதில் உள்ள ஒரு லட்சம் வங்கிக் கிளைகளில் 60 ஆயிரம் கிளைகள் மட்டுமே கிராமத்தில் உள்ளதால், அனைத்து கிராமப் பகுதிகளுக்கும் வங்கி சேவை சென்றடைய முடியாது. வங்கித் தொடர்பாளர்களாக இருப்பவர்கள் வங்கிக் கிளைகள் இல்லாத இடங்களில் வசிப்பவர்களுக்கும் வங்கிச் சேவை அளிக்க முடியும். தற்போதுள்ள முன்னேற்றத்திற்கு ஏற்ப நீங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறீர்கள். வங்கி நடவடிக்கைகளான கடன் வாங்குவது, டெபாசிட் செய்வது, கடன் வசூல் போன்ற அனைத்திலும் வங்கித் தொடர்பாளர்களுக்கு முன் அனுபவமும் உள்ளதால் சிறப்பாக செயல்படுவீர்கள் என்ற எனக்கு தெரியும். வங்கித் தொடர்பாளர்கள் பணி என்பது சமூக சேவை போன்ற மகிழ்ச்சிக்குரிய பணியாகும்.

பாலாமணி: உங்கள் வங்கியில் வங்கித் தொடர்பாளர்களாக பணியாற்ற சுய உதவிக் குழு மகளிருக்கு வாய்ப்பளிப்பீர்களா?

சென்னையை தவிர்த்து தமிழ்நாட்டில் திருச்சி, மதுரை, கோவை போன்ற இடங்களில் எங்களின் வங்கிகள் துவங்கும் போது அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு வங்கிச் சேவை அளிக்க கண்டிப்பாக சுய உதவிக் குழு மகளிருக்கு வாய்ப்பு அளிப்போம். நான் உங்கள் மேலாண்மை இயக்குநரிடம் 'வங்கிக் கிளைகள் இல்லாத கிராமங்கள் இருந்தால் சொல்லுங்கள், அங்கு வங்கிக் கிளைகள் துவக்கலாம்' என்று கேட்டுள்ளேன். அப்படி இருந்தால் அங்கு துவக்கப்படும் கிளையை சுற்றி உள்ள

கிராமங்களுக்கு வங்கிச் சேவையாற்ற சுய உதவிக் குழு மகளிருக்கு வாய்ப்பளிக்கப்படும்.

மகேஸ்வரி: தொட்டில் குழந்தைகளுக்கு ஏதாவது சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

தொட்டில் குழந்தைகள் திட்டம் பற்றி தெரியும். குழந்தைகளை எங்களால் எதுவும் செய்ய முடியாது. அவர்கள் காப்பகம், ஆதரவற்றோர் இல்லம் போன்றவற்றில் வளர்கிறார்கள். அவர்கள் வளர்ந்த பின்னர் தொழிற்பயிற்சி பெற்று, தொழில் தொடங்கினால் அவர்களுக்கு கடன் வழங்கலாம். தொட்டில் குழந்தை என்பதை கருத்தில் கொள்ளாமல் அவர்களின் திறனை மதிப்பிட்டு அவர்களுக்கு உதவுவோம். தொழில் துவங்கி வருவாய் கிடைக்குமா? வங்கிக் கடனை திரும்ப செலுத்த முடியுமா? என்பதை மட்டுமே கருத்தில் கொள்வோம். தொழில் துவங்க விருப்பமுள்ளவர்களுக்கு கண்டிப்பாக கடன் தருவோம். எந்தவித முயற்சியும் இல்லாதவர்களுக்குக் கடன் வழங்குவதில் எங்களுக்கு விருப்பம் இல்லை.

உமாதேவி: உங்கள் வங்கியில் மகளிர் குழுக்களுக்கு பெருங்கடன் வழங்குவீர்களா?

கண்டிப்பாக கொடுப்போம். தற்போது கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். மகிளா வங்கி என்பது முழுக்க முழுக்க மத்திய அரசின் வங்கியாகும். எனவே பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மகிளா வங்கி மேற் கொள்ளும். சுயமாக தொழில் தொடங்க விரும்பும் பெண்களுக்கு கடன் வழங்க எங்கள் வங்கி என்றும் தயாராக உள்ளது. கடன் வாங்கிவிட்டு வட்டி கட்ட நினைப்பவர்களுக்கு நாங்கள் என்றும் துணை நிற்பதில்லை. தொழில் முனைவோர்களுக்கு கடன் வழங்க முன்னுரிமை தருகிறோம். பெண்கள் ஏதாவது ஒரு தொழிலை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் வருவாய் பெற வேண்டும்.

சுமதி: முற்றம் இதழ் குறித்து?

முற்றம் இதழிற்காக நேர்காணல் செய்ய வருவதாக எனக்கு செய்தி வந்தது. நான் உடனே எனது தோழிக்கு போன் செய்து ‘முற்றம் இதழ் பற்றி ஏதாவது உனக்கு தெரியுமா?’ என்று கேட்டேன். உடனே அவர் ‘முற்றம் இதழ் சுய உதவிக் குழுக்களுக்காக அரசு நடத்தும் பத்திரிக்கை. தரமாகவும் நன்றாகவும் இருக்கும் பத்திரிக்கை’ என்று சொன்னார். முற்றம் பத்திரிகையின் வாயிலாக எனது கருத்துக்களை சொல்வது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

சுமதி: முற்றம் வாசகியர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?

முற்றம் வாசகியர்களான சுய உதவிக் குழுப் பெண்களுக்கு கூற விரும்புவது என்னவென்றால், பெண்கள் பின்தங்கி இருக்கக் கூடாது. ஆண்களுக்கு நிகரானவர்கள் பெண்கள் என்பதை விட அவர்களை விட ஒரு படி மேலானவர்கள் பெண்கள் என்பது எனது கருத்து. ஒவ்வொரு பெண்ணும் தன் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டும். பெண்களுக்கு கல்வி என்பது மிகவும் முக்கியம். பொதுவாக நாம் எங்காவது நமது உறவினர்கள் வீட்டிற்கு போனால் அங்குள்ள குழந்தைகள் என்ன படிக்கிறார்கள் என்று கேட்கும் போது அந்த வீட்டில் உள்ள பெண்கள் தான் அந்தக் குழந்தைகள் என்ன படிக்கிறார்கள் என்பதை சொல்லுவார்கள். இதற்குக் காரணம் பெண்கள்தான் குழந்தைகளின் வளர்ச்சியில் அக்கறை காட்டுவார்கள். எனவே பெண்களுக்கு கல்வி அவசியம். அதற்காக 10வது வரை மட்டும் படித்தால் போதும் என்று முடிவு செய்து வேலைக்கு அனுப்பி விடக் கூடாது. பெண்கள் எவ்வளவு படிக்கிறார்களோ அவ்வளவு படிக்க வைக்க வேண்டும். அடுத்ததாக பெண்கள் அனைவரும் வங்கியில் கணக்கு துவக்கிட வேண்டும். கிராமப்புற பெண்கள் கூட வங்கியின் சேவைகள் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். கந்துவட்டிக்காரர்களிடமும் சமையலறையிலும் சேமிப்பதை வங்கியில் சேமிக்க வேண்டும். சுய உதவிக் குழுக்களில் இணைந்து ஏதாவது ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மகளிரிடமும் ஏதோ ஒரு திறமை ஒளிந்து கொண்டு இருக்கிறது. அதை வெளிக்கொண்டு வர வேண்டும். அதன் மூலம் பொருளாதார விழிப்புணர்வு பெற வேண்டும். பெண்கள் தங்களின் உரிமைகளைக் கேட்டுப் பெறுவதற்கு வெட்கப்படக் கூடாது. கந்துவட்டிக்காரர்களிடம் கடன் வாங்குவதை தவிர்க்க வேண்டும். பெண்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் தூணாக இருக்க வேண்டும் என்றுக் கூறிக் கொள்வதுடன், எனது கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு அளித்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கும், அதன் மேலாண்மை இயக்குநர் மற்றும் அலுவலர்களுக்கும், அனைத்துத் தரப்பு மகளிரையும் சென்றடையும் முற்றம் இதழுக்கும் என்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

> **“ ஒவ்வொரு மகளிரிடமும் ஏதோ ஒரு திறமை ஒளிந்து கொண்டு இருக்கிறது. அதை வெளிக்கொண்டு வர வேண்டும். அதன் மூலம் பொருளாதார விழிப்புணர்வு பெற வேண்டும். பெண்கள் தங்களின் உரிமைகளைக் கேட்டுப் பெறுவதற்கு வெட்கப்படக் கூடாது. ”**

பாலாமணி: வேலைக்கு செல்லும் பெண்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?

பெண்கள் இன்று வேலைக்குச் செல்வது தவிர்க்க முடியாதது. அவர்கள் ஆபீஸிற்கு செல்வார்கள், வீட்டையும் பார்த்து கொள்வார்கள் என்ற இரண்டு கோணங்களை மட்டுமே நாம் பேசுகிறோம். நான் அவர்களின் மூன்றாவது கோணத்தைப் பற்றி சொல்லியாக வேண்டும். அவர்கள் நல்ல மகளாக, மனைவியாக, தாயாக, சகோதரியாக, மருமகளாகவும், நல்ல அண்டை வீட்டுக்காரராக இருக்க வேண்டும். அதேபோல் ஆபீஸிற்கு வந்து விட்டால் ஆபீஸ் பணியில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். இதுதான் நான் வேலைக்கு செல்லும் பெண்களிடம் காணும் மூன்றவாது கோணமாகும். அதேபோல் குடும்பம், வேலை என்று மட்டும் இருக்காமல் பெண்கள் தங்களின் வளர்ச்சிக்கும் நேரம் ஒதுக்க வேண்டும். கவிதை, கட்டுரை, ஓவியம், நாடகம், படிப்பு போன்றவற்றில் தங்களின் கவனத்தை செலுத்த வேண்டும். மேலும் குடும்பத்தாரின் ஆதரவும், ஊக்கமும் வேலைக்கு செல்லும் பெண்களின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியம். அலுவலகத்தில் மேலதிகாரிகள், சக பணியாளர்கள், நிர்வாகிகளிடம் நன்மதிப்பையும், நல்ல பேரினையும் பெற வேண்டும்.

(முற்றம்)

நம் மாவட்டம்

நாகப்பட்டினம்

கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரக பெருமாநாட்டு அரங்கில் 25.10.2014 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 66 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு ரூ. 3.50 இலட்சம் வீதம் ரூ. 231 இலட்சமும், மறுசீரமைக்கப்பட்ட 66 கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூ. 1 இலட்சம் வீதம் ரூ. 10 இலட்சமும், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் திரு. து. முனுசாமி, இ.ஆ.ப., மகளிர் திட்ட அலுவலர், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சேலம்

கருத்துப் பட்டறை

சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்து வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கான கருத்துப் பட்டறை 30.10.2014 அன்று வின்சர் கேஸில் ஹோட்டல் வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இந்தியன் வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மண்டல மேலாளர்கள், முன்னோடி வங்கி மேலாளர், நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர், வங்கிகளின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், சேலம் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் திட்ட அலுவலர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாமக்கல்

புத்தாக்கப் பயிற்சி (ம) கல்லூரிச் சந்தை

நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்து வங்கி அலுவலர்களுக்கான முதல்கட்ட புத்தாக்கப் பயிற்சி 31.10.2014 அன்று நாமக்கல் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. சுப்புலட்சுமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் இந்தியன் வங்கி இணைப் பொது மேலாளர் மற்றும் முன்னோடி வங்கி மேலாளர், நாமக்கல் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் திட்ட இயக்குநர் திரு. வீ. திருவரங்கம், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். நாமக்கல் கே.எஸ்.ஆர். தொழில் நுட்ப கல்லூரியில் நடைபெற்ற கல்லூரிச் சந்தையினை மாவட்ட ஆட்சியர் திரு. வ. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் திட்ட இயக்குநர் திரு. வீ. திருவரங்கம், கல்லூரி தலைவர் திரு. கே.எஸ். ரங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர்

வங்கியாளர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்து வங்கியாளர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு 30.10.2014 அன்று திருப்பாச்சூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு. கொ. வீரராகவராவ், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். முன்னதாக மாவட்ட திட்ட இயக்குநர் திரு. சி. க. வீரணன் அவர்கள் வரவேற்புரை வழங்கி, இயக்க செயல்பாடுகள் குறித்து விளக்கி கூறினார். இந்நிகழ்ச்சியில் முன்னோடி வங்கி மேலாளர் இந்தியன் வங்கி திரு. டி. ஆர். சுரேஷ், மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தேனி

முதல் தவணை தொகை வழங்குதல்

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்பட்டு வரும் பெரியகுளம் மற்றும் உத்தமபாளையம் ஒன்றியங்களில் உள்ள 16 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு முதல் தவணை தொகையாக தலா ரூ. 3.50 இலட்சம் வீதம் மொத்தம் 56 இலட்ச ரூபாயினை 17.11.2014 அன்று தேனி மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட இயக்குநர் திருமதி. ஜா. உஷாதேவி அவர்கள் பேசும்போது, 'கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு வழங்கப்படும் இந்நிதியைக் கொண்டு, இலக்கு மக்களை சுய உதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து, ஆதார நிதி வழங்குதல், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக தனிநபர் பொருளாதாரக் கடன் வழங்குதல், இலக்கு மக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சி அளித்தல் போன்றவற்றுக்கு பயன்படுத்த வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

திருவாரூர்

வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சி

திருவாரூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கான உண்டு உறைவிடப் பயிற்சி திருவாரூர் தண்டலை தங்கவேல் திருமண மண்டபத்தில் 27.10.2014 அன்று துவங்கியது. 12 நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சியினை சென்னை, இந்தியன் இன்ஸ்டியூட் ஆஃப் பேங்கிங் அண்டு பைனான்ஸ் நிறுவனம் வழங்கியது.

இப்பயிற்சியினை துவக்கி வைத்த மாவட்ட ஆட்சியர் முனைவர் எம். மதிவாணன், இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது, 'வங்கியில் வழங்கப்படும் கடன்களின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுவினர்கள் தங்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டு, கடனை முறையாக திரும்ப செலுத்துதல் வேண்டும், அப்போதுதான் அனைவரும் வறுமை யிலிருந்து விடுபட இயலும்' என்றும் குறிப்பிட்டார்கள்.

இவ்விழாவிற்கு தலைமை வகித்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத் தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது, 'மகளிர் சுய உதவிக் குழுவிற்கும் வங்கிகளுக்கும் இடையே பாலமாக விளங்கும் வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் இத்திட்டத்தின் மூலம் நியமிக்கப்படுகிறார்கள்,

இவர்களின் வாயிலாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் வங்கி இணைப்பு ஏற்படுத்துதல், ஏற்கனவே பெற்ற கடன் தொகைகளை முற்றிலும் வங்கிகளுக்கு திருப்பம் செய்ய உதவுதல், நிதிச் சார்ந்த கல்வியினை அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் வழங்குதல் மற்றும் நுண்காப்பீடு செய்ய செய்ய ஏதுவான கல்வியளித்தல் போன்ற பல்வேறு பணிகள் மேற் கொள்ளப்படும், மேலும் சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சியின் போது கவனமாக கற்கவும், IIBF நிறுவனம் நடத்தும் தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். இந்நிகழ்ச்சிக்கு பின்னர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க முதன்மை செயல் அலுவலர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வங்கியாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய முதன்மை செயல் அலுவலர் அவர்கள் 'வங்கிவாரியான நிதியிணைப்பில் நடப்பாண்டில் மொத்த இலக்கு மற்றும் அடைந்த இலக்கு விபரம் மேலும் அடைய வேண்டிய இலக்கினை விரைந்து நிறைவு செய்திடவும், கடனுதவி தேவைப்படும் சுய உதவிக் குழுவிற்கு அதன் தரத்தினைப் பொறுத்து நிதியிணைப்பு வழங்கினால் மட்டுமே வறுமைக் குறைப்பு என்பது சாத்தியமாகும்' என்று பேசினார்கள்.

இந்த நிகழ்ச்சிகளில் மாநில வாழ்வாதார இயக்க மாநில வல்லுநர் திரு. ஜெ. கணேஷ் கண்ணா, நிதி ஆலோசகர் திரு. திருநாவுக்கரவு, புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. சுஜாதா ஜேக்கப், முன்னோடி வங்கி மேலாளர் திரு. சங்கரநாராயணன், திருவாரூர் மாவட்ட திட்ட இயக்குநர் செல்வி மல்லிகா, உதவித் திட்ட இயக்குநர்கள் திரு. ஆனந்தநாராயணன், திரு. சீனிவாசன், திரு. சரவணபாண்டியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை

வாழ்வாதார இயக்க செயல்பாடுகள் பார்வையிடுதல்

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூன்றாவது கட்டமாக 4 ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் முதன்மை செயல் அலுவலர் திரு. எல். ராஜா அவர்கள் 11.10.2014 மற்றும் 12.10.2014 ஆகிய தேதிகளில் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தந்து, கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, ஒத்த தொழில் குழுக்கள் போன்றவற்றின் செயல்பாடுகளை பார்வையிட்டார். மேலும் CDFகளுக்கான அடிப்படை பயிற்சி மற்றும் இயக்க வழிகாட்டி கையேட்டு பயிற்சி ஆகியவற்றையும் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார். இந்த ஆய்வின் போது உதவித் திட்ட மேலாளர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் வறுமை ஒழிப்புச் சங்கத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

புதுவாழ்வு திட்டப் பகுதிகளில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனி கவனம் செலுத்தும் வகையில் புதியதாக 'புதுவாழ்வு மனநலத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி, மனநலம் பாதிக்கப்பட்டோரை அடையாளம் கண்டு, அவர்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கி, மருத்துவ உதவிகள் செய்து சமூகத்தில் அவர்களுக்கும் உரிய அங்கீகாரம் கிடைக்க பெறச் செய்வதே நோக்கமாகும்.

மனநல பாதிப்புப் பற்றி ஒரே மாதிரியான கருத்துக்களை மக்களிடையே எடுத்துச் சொல்லவும், மனநோய் தடுப்பு மற்றும் மனநோய் பாதிக்கப்பட்டவர்களை மனித நேயத்துடன் அணுகுவதற்கும் தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம் இரண்டு விழிப்புணர்வு நாடகங்களை உருவாக்கியுள்ளது. அதில் ஒன்று 'பூக்கள்
'பூக்கள்' நாடகத்தை முற்றம் இதழின் இப்பதிப்பு முதல் தொடர்கதையாக வெளியிடப்பட உள்ளோம்.

பூக்கள்

பள்ளியில் மணி அடிக்கப்படுகிறது. சிறுவர்கள் எல்லோரும் விளையாட ஓடி வருகிறார்கள்.

ஏய்...அவன் அவுட்... (விளையாட்டு கலைகிறது- போ...பா அவன் என்னோட கால மிதிஞ்சிட்டா. நான் இந்த விளையாட்டுக்கு வரல.

இளவரசி நீ அந்த விளையாட்டுக்குத்தான் வரல. இந்த விளையாட்டுக்காவது வாயேன்?

போடி...நான் வரல.

(இருவர் இருவராக பிரிதல்)

உத்தி உத்தி... யார் உத்தி...?
என் உத்தி... என் உத்தி...!

கோழி வேணுமா?
முட்டை வேணுமா?

நான் முட்ட... நான் முட்ட... நான் முட்ட...!

கல்லு வேணுமா?
மண்ணு வேணுமா?

எனக்கு கல்லுதான் வேணும்!

(இந்த விளையாட்டு இருவர் சேர்ந்து ஒருவர் தோளில் ஒருவர் கைபோட்டு குதித்து ஆட வேண்டும்)

(மணி அடிக்கிறது... குழந்தைகள் கலைகிறார்கள்)

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

மகளிர் சுய தொழில் முனைவோர் ஊக்குவிப்பு

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் ஒரு அங்கமான குறுந்தொழில் மேம்பாட்டின் மூலம் உலர்மீன் (கருவாடு) உற்பத்தியில் பயனடைந்த திருமதி. சந்தனவள்ளி தன்னுடைய அனுபவத்தினை பகிர்ந்து கொள்கிறார்.

'என்னுடைய பெயர் சந்தனவள்ளி, நான் கடலூர் மாவட்டம், பச்சையாங்குப்பம் வள ஆதார மையத்தில் உள்ள குடிகாடு ஊராட்சி ராசாப்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் உலர் மீன் உற்பத்தி செய்யும் குறுந்தொழிலுக்கு வட்டியில்லாத கடனாக திட்ட நிதி, ரூ. 2,50,000/–யும் எங்களுடைய தொழில் குழுவின் பங்களிப்பு ரூ. 25,000/– உடன் சேர்த்து ரூ. 2,75,000/– முதலீட்டில் 08.04.2013 முதல் இத்தொழிலினை துவங்கி நடத்தி வருகிறோம்.

இதுவரை ரூ. 8,29,120/– அளவில் உலர் மீன் விற்பனை செய்துள்ளோம். நாங்கள் உற்பத்தி செய்கின்ற உலர் மீனை காராமணிக்குப்பம் சந்தை, குள்ளஞ்சாவடி சந்தை, கடலூர் ஓ.டி. மார்க்கெட் மற்றும் அருகாமையில் உள்ள பிற கிராமங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து வருகிறோம். எங்கள் உலர் மீன் சுத்தமானதாகவும், தரமானதாகவும் இருப்பதால் அனைத்து பகுதிகளிலும் அதிகமாக விற்பனை ஆகிறது. இந்த உலர் மீன் உற்பத்தி மற்றும் விற்பனை மூலம் மாதந் தோறும் நிரந்தர வருவாய் கிடைக்கிறது. அனைத்துச் செலவுகளும் போக மீதமுள்ள இலாபத்தில் ரூ. 95,000/– கடனை திருப்பிச் செலுத்தியுள்ளோம். சுனாமி பாதிப்பினால் நிலையான வருவாய் இழந்த எங்களுக்கு நிதியுதவி மற்றும் பயிற்சி அளித்து எங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திய இத்திட்டத்திற்கு நாங்கள் மிக்க நன்றிக் கடன்பட்டுள்ளோம்' என்று கூறுகிறார் சந்தனவள்ளி.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்
திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ், கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன், தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

> சுனாமி பாதிப்பினால் நிலையான வருவாய் இழந்த எங்களுக்கு நிதியுதவி மற்றும் பயிற்சி அளித்து எங்கள் வாழ்வாதாரத்தை மேம் படுத்திய சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்திற்கு நாங்கள் மிக்க நன்றிக் கடன்பட்டுள்ளோம்.

மீன்பிடி தொடர்புடைய பணிகளில் மகளிர்

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலோரம் வாழ் மகளிரின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட, அவர்களில் குறுந்தொழில் செய்ய ஆர்வமுள்ளவர்களைக் கண்டறிந்து அடிப்படை திறன் வளர்த்தல் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சிக்குப் பின்னர், அவரவர் விருப்பத்திற்கேற்ற தொழிலை மேற்கொள்ள கடன் உள்ளிட்ட அனைத்துஉதவிகளும்திட்டத்தின்மூலம்வழங்கப்பட்டது.இம்மகளிர், மின்பிடி தொழிலின் முக்கிய தேவைகளான படகு என்ஜின், மீன்வலை, தூண்டில் மற்றும் அனைத்து உபகரணங்களையும் தாங்கள் நிறுவியுள்ள கடைகளின் மூலம் வியாபாரம் செய்து, இலாபத்துடன் தொழில் செய்து வருகின்றனர். இதுவரை ஆண்கள் மட்டுமே ஈடுபட்ட இத்தொழில்களில் மகளிரும் ஈடுபட முன்வந்துள்ளமை சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மிகப்பெரிய வெற்றியாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் இத்தொழில்களில் ஈடுபட்டுள்ள மகளிரும், அவர்கள் செய்யும் தொழில் விபரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

வ. எண்.	பயனாளி பெயர் / விலாசம்	தொழில் விபரம்	பயனாளி பங்குத் தொகை ரூ.	திட்ட உதவித் தொகை ரூ.	நாளது வரை விற்பனை ரூ.
1.	திருமதி. ஜெசிந்தா, சைமன் காலனி	படகு எஞ்சின் பழுது நீக்கம் மையம்	30,000/-	2,70,000/-	3,64,610/-
2.	திருமதி. செல்வி, சைமன் காலனி	மீன் பிடி வலை பின்னுதல்	25,000/-	2,50,000/-	29,10,947/-
3.	திருமதி. கிளமெண்டா, தூத்தூர்	மீன்பிடி தொழில் உபகரணங்கள் விற்பனை	34,000/-	2,50,000/-	18,00,822/-
4.	திருமதி. தீபா றோஸ், பைங்குளம்	பெண்ஸ் மீன்பிடி தொழில் உபகரணங்கள் விற்பனை	30,000/-	2,50,000/-	8,25,725/-

கடலோர மாவட்டங்களில் மீன் உலர் களங்கள்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் கடலோர கிராமங்களில் பல சமுதாய உட்கட்டமைப்பு பணிகள் செய்து தரப்பட்டுள்ளன. மீனவர்களின் நலனுக்காக ரூ. 215 லட்சம் செலவில் 43 மீன் உலர்களங்கள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் இக்களங்களில் பதப்படுத்தப்படும் மீன்களுக்கு, சந்தையில் தேவைப்பாடு அதிகமாக உள்ளதுடன் அதிக விலையும் கிடைக்கின்றது. பொது இடங்களில் மட்டுமே உலர் களங்கள் அமைக்கப்படுவதால், அனைத்துத் தரப்பு மக்களாலும் இவை பயன்படுத்தப்படுகின்றன. அதிகமான மீன் மீனவர்களுக்கு கிடைக்கும் போது, உலர் மீன்களாக மட்டுமே பயன்படுத்தப்படும் மீன்கள் அதிக மாக கிடைக்கும் போதும் உலர் களங்கள் மிக்க பயனுள்ளவையாக அமைகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டம், நெம்மேலி மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் வரும் மீன்களை கடல் மணலிலும், வீட்டு வாசலிலும் உலர வைத்து வந்தனர். அவை சுத்தமில்லாமல் இருந்ததால் குறைந்த விலைக்கு விற்கும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இக்கிராம மக்கள் மீன் உலர் களம் கட்டித் தரும்படி கோரினர்.

அவர்களின் 2013–14ஆம் ஆண்டு திட்டத்தில் ரூ. 4.80 இலட்சம் மதிப்பீட்டில் மீன் உலர் களம் ஒன்றை சிறந்த முறையில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த மீன் உலர் களத்தில் சுகாதார முறையில் உலர்த்தப்பட்ட உலர் மீன்கள் நல்ல விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இந்த உலர் களத்தை பராமரித்து பாதுகாப்புடன் பயன்படுத்திட பயன்படுத்துவோர் குழு (User Group) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மீனவர் விற்பனை சங்கங்களின் செயல்பாடுகள்

தேவசகாயம்பிள்ளை மீனவர் முன்னேற்ற சங்கம், குளச்சல், குமரி மாவட்டம்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 50 மீனவர் விற்பனை சங்கங்கள் அமைத்து, தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டு, அந்தந்த சங்கங்கள் வாயிலாக மீன்பிடி தொழில் செய்யும் மீனவர்களுக்கு பல நல திட்ட உதவிகள் செய்யப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் பகுதியில் பகுதியில் 'தேவசகாயம்பிள்ளை மீனவர் முன்னேற்ற சங்கம்', 2013ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு, தமிழ்நாடு கூட்டுறவு சங்க விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இதில் 32 மீனவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த 32 பேரும் இடைத்தரகர்களிடம் ஏற்கனவே கடன் வாங்கியிருந்ததால், தங்கள் சிறு படகுகள் மூலம் பிடிக்கும் மீனை வெளிச்சந்தை விலையை விட குறைந்த விலைக்கு இடைத்தரகர்களிடமே விற்று வந்தனர். எனவே, அவர்களை இத்தகைய கடனிலிருந்து மீட்க, கடன்மீட்பு நிதியாக ரூ.7,75,000/– இச்சங்கத்திற்கு வழங்கப்பட்டது. இந்நிதி உதவியால் அனைவரும் கடனிலிருந்து மீட்கப்பட்டனர். இடைத்தரகர்களின் பிடியிலிருந்து வெளியே வந்துள்ள இவர்கள் தற்போது வெளிச்சந்தையில் நல்ல விலைக்கு மீன்களை விற்று பயனடைந்து வருகின்றனர்.

மீனவர் விற்பனை சங்கத்தில் உறுப்பினராக இணைந்த பிறகு, மாதம் ஒன்றிற்கு ரூ.10,00,000/– அளவில் மீன் விற்பனை செய்து வருகின்றனர். மாதத்தில் 15 தினங்கள் பிற மாநிலங் களிலும் மீன் பிடிக்கச் செல்லும் இவர்களின் வாழ்க்கைத் தரம் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டம் மூலம் உயர்ந்துள்ளது.

மீனவர்களின் குடும்ப நிதி நிலையில் மேம்பாடு காணப்படுகிறது. குடும்ப உறுப்பினர்களின் படிப்பு, மருத்துவம் மற்றும் கலாச்சார தேவைகளை சந்திக்க போதுமான வருமானம் கிடைக்கப் பெறுகிறது என்று அனைத்து மீனவர்களும் தெரிவிக்கின்றனர்.

> **“ மீனவர் விற்பனை சங்கத்தில் உறுப்பினராக இணைந்த பிறகு, மாதம் ஒன்றிற்கு ரூ. 10,00,000/- அளவில் மீன் விற்பனை செய்து வருகின்றனர். ”**

கன்னியாகுமரி மாவட்ட திட்ட
செயல்பாடுகள் கூடுதல் இயக்குநர் ஆய்வு

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளை கூடுதல் திட்ட இயக்குநர் திரு. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ் அவர்கள் 16.10.2014 மற்றும் 17.10.2014 ஆகிய தேதிகளில் ஆய்வு மேற் கொண்டார். மாவட்ட திட்ட செயலாக்க அலுவலர், உதவி செயற்பொறியாளர்கள், பிற அலுவலர்கள் இந்த ஆய்வில் கலந்து கொண்டனர்.

தூத்தூர் வள ஆதார மையம், தூத்தூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றில் நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை குறித்தும், பதிவேடுகள் ஆவணங்கள் பராமரித்தல் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தகுதியான பயனாளிகளுக்கு தாமதம் இன்றி துயர் குறைப்பு நிதி வழங்குவதை கண்காணிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டது. மீன் உபகரணங்கள் விற்பனை, கணினி மற்றும் ஜெராக்ஸ் மையம், நங்கூரம் தயாரித்தல் ஆகிய குறுந்தொழில் நிறுவனங்கள் பார்வையிடப்பட்டு, தொழில் மேம்பாட்டுக் கான ஆலோசனைகள் வழங்கப்பட்டது. தூத்தூரில் ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன் உலர் களத்தை பார்வையிட்டு உடனடியாக அதை பயன்பாட்டிற்கு கொண்டு வர கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் 25 சதவீத நிதியுதவியுடன் NABFINS நிறுவனம் வழங்கும் கடன் தொகையின் மூலம் 2013-14ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட 36 குறுந்தொழில் பிரிவுகளை பைங்குளம், மிடாலம், கோவளம், லீபுரம், மணக்குடி, இராஜக்காமங்கலம் ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மீன் விற்பனை, காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை, கடல் சிப்பி கைவினைப் பொருட்கள், கயிறு திரித்தல், தையல் மற்றும் ஆடைகள் விற்பனை ஆகிய தொழில்களும் பார்வையிடப்பட்டு, தொழில் வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும், தொழிலை திறம்பட கண்காணிக்க வேண்டியதன் அவசியமும் அலுவலர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. அனைத்து குறுந்தொழில்களிலும் பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும் என வள ஆதார மையப் பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இறுதியாக குறும்பனை கிராமத்தில் கட்டப்பட்டு வரும் மீன் கொள்முதல் மையம் கட்டுதல், இனையம் மீனவர் சங்கக் கட்டிடம் கட்டுதல் போன்ற பணிகளையும் பார்வையிட்டு அனைத்துப் பணியாளர்களும் தரமாகவும், விரைவாகவும் முடித்திட அறிவுறுத்திடப்பட்டது.



“மீன் உபகரணங்கள் விற்பனை, கணினி மற்றும் ஜெராக்ஸ் மையம், நங்கூரம் தயாரித்தல் ஆகிய குறுந்தொழில் நிறுவனங்கள் பார்வையிடப்பட்டு, தொழில் மேம்பாட்டுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டது.”

- இரண்டு படங்களுக்கும் உள்ள ஆறு வித்தியாசங்களைக் கண்டுபிடிக்கவும்



- எத்தனை சதுரங்கள் உள்ளன?



- புள்ளிகளை இணைக்கவும்



- மையத்தை அடைய....

உங்க ஏரியா...

> ஆர்வமுள்ள மாற்றுத் திறன் படைத்தவர்களை தேர்ந்தெடுத்து, பயிற்சி அளித்து, மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள வழிவகை செய்யப்படுகிறது.

மாற்றுத் திறனாளி வீரர்களுக்குப் பாராட்டு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள குன்றத்தூர், மதுராந்தகம், அச்சிறுபாக்கம் மற்றும் உத்திரமேரூர் ஆகிய ஒன்றியங்களில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள், உபகரணங்கள் மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்ற 8வது தேசிய மாற்றுத் திறனாளிகளுக்கான தடகளப் போட்டிகளில் காஞ்சிபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்டம் சார்பாக செல்வி, மீனா, ராஜ் குமார், நடராஜன், சண்முகம் மற்றும் ஆரளி ஆகிய மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டு 6 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம் என மொத்தம் 10 பதக்கங்களை வென்றுள்ளனர்.

பதக்கம் வென்ற மாற்றுத் திறனாளி வீரர்களை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் முனைவர். வி. கே. சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டி, மென்மேலும் பல வெற்றிகளை பெற தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்நிகழ்வின்போது புதுவாழ்வு திட்ட மாவட்ட மேலாளர் திரு பி. தனசேகர் உடனிருந்தார்.

திட்ட பயனாளிகளுடன் கலந்துரையாடல்

வேலூர் மாவட்டம், குடியாத்தம், மோடிகுப்பம் ஊராட்சியில் செயல்படும் புதுவாழ்வு திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளிகளுடன் மாவட்ட ஆட்சியர் திரு. இரா. நந்தகோபால், இ.ஆ.ப., அவர்கள் கலந்துரையாடினார். இந்த கலந்துரையாடலில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி. தனலட்சுமி, திரு. கனகராஜ், ஊராட்சி மன்ற தலைவர் திரு. கோவிந்தராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலின் போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசும்போது, 'புதுவாழ்வு திட்டத்தின் கீழ் பல்வேறு குழுக்களின் உறுப்பினர்களுக்கு கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலமாக, பல்வேறு தொழில்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டு, வேலைவாய்ப்பும் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

மேலும் குறைந்த வட்டியில் வங்கிக் கடன் வழங்கப்பட்டு சுய தொழில் மேற்கொள்ளவும், வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டார்.

கலந்துரையாடலுக்குப் பின்னர் கீழ்கொல்லப்பள்ளி கிராமத்தில் அசோலா கால்நடை தீவனம் வளர்த்தல் மற்றும் பால் தரம் பிரிக்கும் இயந்திரம் போன்றவற்றின் மூலம் வருவாய் ஈட்டி வரும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயல்பாடுகளையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
புது வாழ்வு திட்டம்

தேனி

உலக வங்கிக் குழுவினர் ஆய்வு

தேனி மாவட்டம் போடி ஒன்றியத்தில் உள்ள 10 ஊராட்சிகளில் சமூக மற்றும் பொருளாதாரத்தில் சுய உதவிக் குழுப் பெண்களின் முன்னேற்றத்தை அறிவதற்கான பங்கேற்புடன் கூடிய ஆய்வு (Pre tracing) சிறப்பாக செய்து முடிக்கப்பட்டது. இதனை பிற மாவட்டங்களிலும் செயல்படுத்தும் வகையில் பயிற்சி குறும்படம் தயாரிக்கும் பொருட்டு கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. ஆர். வி. ஷஜீவனா அவர்கள் தலைமையில், உலக வங்கி சமூக ஆய்வுக் குழுவைச் சேர்ந்த திருமதி. நேத்ரா மற்றும் திரு. கௌதம் ஆகியோர் பங்கேற்புடன் 06.11.2014 அன்று ஆய்வு செய்யப்பட்டது. இதில் மாநில வல்லுநர் திரு. கணேஷ்குமார், திரு. மணிவண்ணன், மாவட்ட திட்ட மேலாளர் திரு. எஸ். கழுகாசலமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

> **“சமூக மற்றும் பொருளாதாரத்தில் சுய உதவிக் குழுப் பெண்களின் முன்னேற்றத்தை அறிவதற்கான பங்கேற்புடன் கூடிய ஆய்வு (Pre tracing) செய்வதற்கு மாநில அலுவலகத்தால் தேனி மாவட்டம் முன்மாதிரி மாவட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.”**

இராமநாதபுரம்

சமூக தணிக்கைக்குழு வலுப்படுத்துதல் பயிற்சி

இராமநாதபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்டம் சார்பில் மாநில அளவிலான சமூக தணிக்கைக் குழு செயல்பாடுகளை வலுப்படுத்தலுக்கான கருத்துப் பட்டறை 07.10.2014 மற்றும் 08.10.2014 வரை மதுரை பில்லர் காலில் நடைபெற்றது. இக்கருத்துப் பட்டறைக்கு கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. சுஜாதா ஜேக்கப் அவர்கள், மாநில வல்லுநர் திரு. சுரேஷ், மாவட்ட திட்ட மேலாளர் மற்றும் உதவித் திட்ட மேலாளர் ஆகியோர் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். ■

கோவை

முன் பருவ தொழில் நுட்ப சாகுபடி பயிற்சி முகாம்

கோவை மாவட்டம் சாடிவயல் கிராமத்தில் செயல்படும் 30 பழங்குடியின ஒத்த தொழில் கூட்டமைப்பு விவசாயிகளுக்கு உளுந்து சாகுபடியில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதைப் பற்றிய தொழில் நுட்பம் குறித்த பயிற்சி விவேகானந்தாபுரம் வேளாண் அறிவியல் மையத்தைச் சேர்ந்த டாக்டர் பி. குமாரவேல் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர் திரு சுரேஷ் ஆகியோர் மூலம் வழங்கப்பட்டது.

பெரம்பலூர்

கூடுதல் திட்ட இயக்குநரின் கள ஆய்வு

புதுவாழ்வு திட்ட மாநில கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. சுஜாதா ஜேக்கப் மற்றும் மாநில வல்லுநர் திரு. கே. கருப்புசாமி ஆகியோர் 28.10.2014 அன்று பெரம்பலூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்தனர். எறையூர் களபகுதிக்குட்பட்ட இனாம் அகரம் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வின்போது வி.களத்தூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு நேரடி வங்கிக் கடனாக ரூ. 9 இலட்சமும், சென்னை CNC நிறுவனம் மூலம் பயிற்சி பெற்ற விஜயகுமாருக்கு பயிற்சி சான்றிதழும் கூடுதல் திட்ட இயக்குநர் வழங்கினார். இந்நிகழ்வின்போது மாவட்ட திட்ட மேலாளர் திருமதி. பா. சுதாதேவி மற்றும் உதவித் திட்ட மேலாளர் திரு. ஆ. தில்லைநடராஜன் ஆகியோர் உடனிருந்தனர். ■

சேலம் புதுவாழ்வு திட்ட செயல்பாடுகள் ஆய்வு

சேலம் மாவட்டம் ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை சேலம் மாவட்ட ஆட்சியர் திரு. மகரபூஷணம், இ.ஆ.ப., அவர்கள் 24.10.2014 அன்று ஆய்வு செய்தார். முதலில் மஞ்சகுட்டை கிராமத்தில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்க அலுவலகத்திற்கு சென்று, அங்குள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்களிடம் கலந்துரையாடினார்.

அப்போது அப்பகுதியில் செயல்படும் பூச்சரத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை இப்பகுதியில் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவரும் வாங்க வேண்டும் என்றும், தங்களின் பயன்பாட்டிற்கு போக எஞ்சியுள்ள பொருட்களை மட்டுமே வெளியிடங்களுக்கு விற்பனை செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு செய்வதன் மூலமாக பூச்சரத்திற்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் என்று ஆலோசனைகள் வழங்கியதுடன், ஏற்காடு மலையின் சுற்றுச்சூழலை பேணிக்காப்பதில் அனைவரும் உரிய ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

> “ஏற்காடு மலையின் சுற்றுச்சூழலை பேணிக்காப்பதில் அனைவரும் உரிய ஒத்துழைப்பை நல்க வேண்டும்”

இந்நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. க. மூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. ஐயப்பன், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் திரு. கண்ணன், ஏற்காடு ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் பணியாளர்கள் கலந்து கொண்டனர். ■

புதுக்கோட்டை

மாவட்ட ஆட்சியரின் பாராட்டு

புதுவாழ்வு திட்டம் மாற்றுத் திறனாளிகளின் நல்வாழ்விற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒருபகுதியாக விளையாட்டுப் போட்டிகளின் ஆர்வமுள்ள மாற்றுத் திறனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கி, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் அவர்களைப் பங்கு கொள்ள புதுவாழ்வு திட்டத்தின் மூலம் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகிறது. சென்னை, சண்டிகர், மத்திய பிரதேச மாநிலம் இந்தூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற தேசிய அளவிலான தடகளம் மற்றும் நீச்சல் போட்டிகளில் புதுக்கோட்டை மாவட்ட புதுவாழ்வு திட்டம் சார்பில் கலந்து கொண்டு பதக்கங்களை வென்ற மாற்றுத் திறனாளிகளை மாவட்ட ஆட்சியர் திரு. செ. மனோகரன், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி. வசுமதி ஆகியோர் பாராட்டினார். ■

மகளிரின் முகவரியாய் முற்றம்...!

முற்றம் இதழ் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	– ரூ. 100/–
இரண்டு ஆண்டு சந்தா	– ரூ. 150/–
மூன்று ஆண்டு சந்தா	– ரூ. 250/–
நான்கு ஆண்டு சந்தா	– ரூ. 300/–
ஆயுள் சந்தா	– ரூ. 600/–
புரவலர் கட்டணம்	– ரூ. 15,000/–

சந்தாத் தொகையை ‘முற்றம்’ என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தக்க முறையில் வங்கி வரைவோலையாக மட்டுமே அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையுடன், சந்தாதாரரின் பெயர், க/பெ. (அ) த/பெ., குழுவின் பெயர், வீட்டு எண், தெரு எண், கிராமத்தின் பெயர், தாலுக்கா பெயர், மாவட்டத்தின் பெயர் ஆகியவற்றுடன் அஞ்சல் குறியீட்டு எண்ணையும் (பின்கோடு எண்) தவறாமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். முற்றம் சந்தாக்களுக்குரிய புத்தகம் அந்தந்த நபருக்கு அனுப்ப வேண்டுமா? அல்லது மொத்தமாக எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதை தெளிவாகக் கடிதத்தில் குறிப்பிட வேண்டும்.

பதக்கங்கள் வென்றவர்களுக்குப் பாராட்டு...

புதுவாழ்வு திட்டமானது கிராமப்புற ஏழை எளிய மக்களுக்காக 2006ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயலாற்றி வருகிறது. இத்திட்டமானது மக்களால் மக்களைக் கொண்டு செயற்படுத்தும் திட்டமாகும். மேலும் மாற்றுத் திறனாளர்களின்பால் சிறப்புக் கவனம் செலுத்தி, அவர்களது வாழ்க்கையை செம்மைப்படுத்தி, அவர்களுக்கு மறுவாழ்வு கொடுத்தும் வருகிறது. மாற்றுத் திறனாளர்களின் தனித்திறனை வெளிக்கொணரும் பொருட்டு பல்வேறு திறன் போட்டிகளில் பங்கு கொள்ள அவர்களுக்கு பயிற்சிகளும் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக கடந்த ஜுலை மாதம் 19 மற்றும் 20 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது மாநில அளவிலான மாற்றுத் திறனாளர்களுக்கான நீச்சல் போட்டியில் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட மாற்றுத் திறனாளர்கள் 96 தங்கம், 55 வெள்ளி மற்றும் 43 வெண்கலம் என 184 பதக்கங்களை வென்றனர்.

மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் 2014 நவம்பர் மாதம் 6, 7, 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் நடைபெற்ற 14வது தேசிய அளவிலான மாற்றுத் திறனாளர்களுக்கான நீச்சல் போட்டியில் 16 மாநிலங் களிலிருந்து 350 போட்டியாளர்கள் பங்கேற்றனர். இந்தப் போட்டியில் தமிழ்நாட்டின் சார்பில் 59 போட்டியாளர்கள் கலந்து கொண்டு 26 தங்கம், 3 வெள்ளி மற்றும் 5 வெண்கலம் என 34 பதக்கங்களை வென்றனர்.

இதில் புதுவாழ்வுத்திட்டத்தின்சார்பாக பங்கேற்ற 45 தகுதி வாய்ந்த வீரர் / வீராங்கனைகள் மாற்றுத் திறனாளர்களுக்கான நீச்சல் போட்டியில் பல்வேறு பிரிவுகளில் கலந்து கொண்டு 10 தங்கம், 1 வெள்ளி மற்றும் 2 வெண்கலம் என மொத்தம் 13 பதக்கங்களை வென்றுள்ளனர். சுரேஷ், திருமதி. அம்பிகாபதி, ரம்யா ஆகியோர் முறையே 4, 3, 2 என்ற எண்ணிக்கையில் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

மேலும் 2014 நவம்பர் மாதம் 3ஆம் தேதி முதல் 5ஆம் தேதி வரை சண்டிகாரில் நடைபெற்ற நான்காவது தொழிற்திறன் சார்ந்த போட்டியில் 22 மாநிலங்களிலிருந்து 460 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் தமிழ்நாட்டில் இருந்து 80 நபர்கள் பங்கேற்று 12 பதக்கங்கள் (2 தங்கம், 3 வெள்ளி மற்றும் 7 வெண்கலம்) வென்று நமது தமிழகத் திற்குப் பெருமை சேர்த்துள்ளனர். நமது புதுவாழ்வு திட்டம் சார்பில் பங்கு பெற்றவர்கள் 4 வெண்கலப் பதக்கம் வென்றுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

மேற்படி போட்டிகளில் பங்கு பெற்று பதக்கங்களை வென்று புதுவாழ்வு திட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ள மாற்றுத் திறன் படைத்த வீரர் / வீராங்கனைகளுக்குப் பாராட்டு விழா 11.11.2014 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது.

புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. ஆர். வி. ஷஜீவனா அவர்களின் வரவேற்புரையுடன் துவங்கிய இவ்விழாவில் புதுவாழ்வு திட்டத்தின் மாநில திட்ட இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, போட்டிகளில் பதக்கங்களை வென்றவர்களைப் பாராட்டினார்கள்.

புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. சுஜாதா ஜேக்கப், தமிழ்நாடு பாராஒலிம்பிக் நீச்சல் அசோசியேஷன் உறுப்பினர் செயலர் திருமதி. மாதவி லதா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நீச்சல் பயிற்சியாளர் திரு. விஜயகுமார் மற்றும் அரசு உயர் அதிகாரிகள், புதுவாழ்வு திட்டத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

புதுவாழ்வு மனநலத் திட்ட விழிப்புணர்வு இரதம்

மனநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு கை கொடுக்கும் வகையில் கடலூர் மாவட்ட புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் 'உங்கள் நண்பன்' என்ற புதுவாழ்வு மனநலத் திட்ட விழிப்புணர்வு இரதத்தை விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் 30.10.2014 அன்று கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. கருப்பையா, உதவித் திட்ட மேலாளர் திரு. சிவப்பிரகாசம், நல்லூர் வட்டார BMHP திரு குணசேகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த இரதம் நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 64 ஊராட்சிகளின் மக்களிடையே கலைநிகழ்ச்சிகள் நடத்தியும், துண்டு பிரசுரங்கள் வழங்கியும், சுவரொட்டிகள் மற்றும் சுவர் விளம்பரங்கள் மூலம் மனநலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

புதுவாழ்வு மன நல திட்டத்தின் மூலம் மாவட்ட அளவிலான கருத்துப்பட்டறை அனைத்து மாவட்ட அலுவலர்களுக்கும் நடத்தப்பட்டுள்ளதுடன், நல்லூர் ஒன்றியத்திலுள்ள 64 ஊராட்சிகளில் உள்ள 64 CDFகளுக்கு 6 நாள் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு மருத்துவ முகாம் நடத்தி, அதன் மூலம் 139 நபர்களுக்கு மனநோய் பாதிப்பு உள்ளது கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களுக்கு அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் தொடர் மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

புதுவாழ்வு மனநலத் திட்ட விழிப்புணர்வு

இந்தப் பிரச்சார வாகனம் எருமப்பட்டி வட்டாரத்தில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் சென்று, மன நலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும். இந்த வட்டாரத்தில் புதுவாழ்வு மனநலத் திட்டம் மூலம் இதுவரை 279 மனநலம் பாதிக்கப்பட்டோர் கண்டறியப்பட்டுள்ளனர்.

நாமக்கல் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்பட்டு வரும் எருமப்பட்டி வட்டாரத்தின் அனைத்துப் பகுதிகயிலும் மனநல திட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக 'உங்கள் நண்பன்' என்ற புதுவாழ்வு மன நல திட்ட விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை மாவட்ட ஆட்சியர் திரு. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 11.11.2014 அன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் தேவகுமார், துணை இயக்குனர் (சுகாதாரம்) டாக்டர் ஜெமினி, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் திரு. பாலாஜி, அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் மோகன், புதுவாழ்வு திட்ட உதவித் திட்ட மேலாளர்கள் ஜுலியஸ் தியோடர், ராஜு, பாஸ்கரன், உமாசுந்தரி, எருமப்பட்டி வட்டார அணித்தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த வட்டாரத்தில் புதுவாழ்வு மனநலத் திட்டம் மூலம் இதுவரை 279 மனநலம் பாதிக்கப்பட்டோர் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவியும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

குளக்கரை கெண்டை மீன் வளர்ப்பு...

குளங்களின் நன்னீர் மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதற்கு முன்னர், நாம் திட்டமிட்டு இருக்கக் கூடிய வளர்ப்பு காலம், குளங்களுக்கு நீர் கிடைக்கும் காலத்தின் அளவு, தீவனத்தின் தன்மை மற்றும் எதிர்பார்க்கும் அறுவடை எடை போன்றவற்றை கருத்தில் கொள்ள வேண்டும். வளர்ப்பு காலம் சுமார் 10 மாதங்கள் என்று வைத்துக் கொண்டால், நாம் இடும் உரம், மேலுணவு இவற்றை கருத்தில் கொண்டு, 1 எக்டோருக்கு 5000 முதல் 10,000 வரை விரலளவு வளர்ந்த குஞ்சுகள் என்ற அளவில் இருப்பு செய்யலாம்.

குறைந்தது 100 மி.மீ. அளவு வளர்ந்த மீன்களே இருப்பு செய்யப் பரிந்துரைக்கப்படுகிறது. கெண்டை மீன் வளர்ப்பில், குளத்தின் பல்வேறு மட்டங்களில் ஏற்படும் உணவு இருப்பு மற்றும் உணவுப் போட்டிகளைத் தவிர்க்க ஒன்றுக்கும் மேற்பட்ட இனங்களை சரியான விகிதத்தில் விட வேண்டும்.

ஆறு இனங்கள் கொண்ட இணை அதாவது, கட்லா, ரோகு, மிர்கால், புல்கெண்டை, வெள்ளிக் கெண்டை மற்றும் சாதா கெண்டை ஆகியவையே இந்தியாவில் கெண்டை மீன் வளர்ப்பிற்கு சிறந்த இணையாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் இவற்றிற்கு சந்தைகளில் பெரும் தேவையும் உள்ளது. இவற்றில் கட்லா மற்றும் வெள்ளிக் கெண்டை குளத்தின் மேல் மட்டத்திலுள்ள நுண்ணுயிரிகளை உண்ணக் கூடியவை. ரோகு, நீரின் நடுமட்டத்திலுள்ள சிறிய உயிரினங்களையும், பாசிகளையும் உண்ணும். புல்கெண்டை, நீர்த் தாவரங்களையும் புற்களையும் ஏராளமாக உண்ணும். மிர்காலும், சாதா கெண்டையும் அடிமட்டத்திலுள்ள மக்கியப் பொருட்களை உண்ணக் கூடியவை. இவ்விணை நீரின் அனைத்து மட்டங்களையும் சிறப்பாக சிறப்பாக பயன்படுத்தக் கூடியது.

உரமிடுதல்

கெண்டைமீன்வளர்ப்புக்குளங்களைஅதன் ஊட்டம்மிக்கமண் மற்றும்நீரைப் பொறுத்து உரமிட வேண்டும். 20–25% உரத்தினை இருப்பு செய்யும் முன் இட்ட பிறகு மீதத்தை சமமான அளவில் மாதம் இருமுறை வழங்க வேண்டும். குளத்திற்கு அடியுரமாக சாணம், பன்றிக் கழிவு, வாத்து எரு அல்லது கோழி எரு போன்றவற்றை இடலாம். ஒரு எக்டேர் பரப்பளவு கொண்ட குளத்திற்கு வருடத்திற்கு சுமார் 12 முதல் 15 டன்கள் வரை சாணமோ அல்லது 5 டன்கள் என்ற அளவில் கோழி எருவோ இட வேண்டும். சாணத்தை பொறுத்த மட்டில் உலர்ந்த சாணத்தை விட மட்கிய அல்லது ஈர சாணம் மேலானது. கோழி எருவை பொறுத்த மட்டில் மட்கிய ஆழ்கூழ எரு (Deep Litter) நல்லது.

நைட்ரோஜன் பின்னம் எனப்படும் அசோலா ஒரு உயிர் உரமாகத் தரப்பட்டு வருகிறது. ஹெக்டேருக்கு ஒரு வருடத்திற்கு 40 டன் என்ற அளவில் இடும்போது, அது தீவிர கெண்டை மீன் வளர்ப்பிற்குத் தேவையான முழுமையான சத்துக்கள் கிடைக்கும் என நிரூபிக்கப்பட்டுள்ளது. உரச் சிதைவுகள் மட்டும் போது அவைகள் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள கெண்டைகளுக்கும் சென்றடைகின்றன. சாண எரிவாயுக் கழிவுனை வருடத்திற்கு ஒரு ஹெக்டோருக்கு 35–45 டன் என்ற அளவில் இடும்போது அவை குறைவான ஆக்சிஜன்களை எடுத்துக் கொண்டு, மீன்களுக்கு அதிக ஊட்டம் தருகின்றன.

நீர் பரிமாற்றம்

நீர் பரிமாற்றம் கெண்டை மீன் வளர்ப்பில் முக்கியமான நடவடிக்கையாக கருதப்படு கிறது. தொடர்ந்து இடப்படும் கழிவுகளின் தேக்கத்தினாலும், சிதைந்து போன பயன் படாத தீவனத்தினாலும் தண்ணீரின் தரம் சீரழிந்து, மீன்களின் வளர்ச்சி பாதிக்கப் பட்டு, நோய் தொற்று ஏற்படும். எனவே போதிய கால இடைவெளியில் தண்ணீர் மாற்றம் செய்ய வேண்டியது அவசியம். குறிப்பாக கெண்டை மீன் வளர்ப்பின் அறுவடை காலங்களில் தண்ணீர் மாற்றம் செய்ய வேண்டும்.

அறுவடை

பொதுவாக கெண்டை மீன் பண்ணை யத்தில் பத்து மாதங்கள் பொறுத்துதான் அறுவடை செய்யப்படும். எனினும் மீன்கள் சந்தையிடுவதற்குத் தேவையான வளர்ச்சியை அடைந்து விட்டாலே அறு வடையைத்துவங்கலாம். அது எஞ்சியுள்ள மீன்களின் வளர்ச்சிக்கு பயனுள்ளதாக அமையும்.

> **பொதுவாக குளத்தின் உற்பத்தியைப் பொறுத்து, 30-40% மேற்பரப்பு மீன்களையும், (கட்லா மற்றும் வெள்ளிக் கெண்டை), 30-35% நடுப்பரப்பு மீன்களையும் (ரோகு, புல்கெண்டை) மற்றும் 30-35% அடிப்பரப்பு மீன்களையும் (மிர்கால், சாதா கெண்டை) விடலாம்.**

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (62,000 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

முழு சுகாதார தமிழகம்

கையிலெடுப்போம் துணிப்பையை!
கைவிடுவோம் பாலிதீன் பையை!

மக்காத பிளாஸ்டிக் குப்பையால் மக்கும் சுகாதாரம்!

விழித்திடு! எழுந்திடு! இன்றே பிளாஸ்டிக்கை ஒழித்திடு!

பிளாஸ்டிக் உபயோகத்தை தவிர்ப்போம்!
ஆரோக்கியமான தமிழகம் படைத்திடுவோம்!!

வெளியீடு : ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு அரசு

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH(C)/455/12-14 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2012 - 14
Date of Publication 21.11.2014